Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 புரட்டாதி 22 ஞாயிற்றுக்கிழமை (08-10-2000) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:247

# தேர்தலை ஒட்டி நாடு முழுவதும் ராணுவ ரோந்து!

## வன்முறைகளைத் தடுக்க

கொழும்பு,ஒக்ரோபர்8

**பொதுத்தேர்தல் பணிகளில் பொலிஸாரைத் தவிர, வேறு எந்த படை அணிகளைச் சேர்ந்தோரும் நேரில் ஈடுபடுத்தப்படாவிட்டாலும், தேர்தல் காலத்தில் வன்முறைகளைத் தடுத்து நிறுத்துவதற்காக இம்முறை முதல் தடவையாக நாடு முழுவதிலும் இராணுவம் மற்றும் முப்படையினரும் வீதி ரோந்துப் பணிகளில் ஈடுபடுத்தப்படவிருப்பதாக அரச உயர் வட்டாரங்கள் தெரிவித்தன.**

தேர்தலை ஒட்டிய வன்முறைகள், கூட்டமாக கூடி கலவரம் புரிதல், வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகில் கலாட்டா, வாக்களிப்பு நிலையங்களை நோக்கி கூட்டமாகத் திரண்டு சென்று ரகளை புரிய முயற்சித்தல் போன்றவற்றை தடுப்பதற்காகவே இம்முறை படையினரின் நேரடி உதவிகோரப்பட்டிருக்கின்றது. எனினும் வாக்களிப்பு நிலையங்களில் சட்டம், ஒழுங்கைப் பேணும் கடமையை தொடர்ந்து பொலீஸாரே மேற்கொள்வர்.

என்றாலும் இப்பணிக்குடி பொலீஸார், ரிசேவ் பொலீஸார் ஆகியோரைத் தவிர விசேட அதிரடிப் படையைச் சேர்ந்த பொலீஸார், கலகம் அடக்கும் பொலீஸ் பிரிவைச் சேர்ந்தோர், நாசகாரத் தடுப்புப் பிரிவுப் பொலீஸார் ஆகியோரையும் அழைக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது வடக்கு - கிழக்கில் மட்டுமே முழுஅளவில் இராணுவம் மற்றும் படையினரின் ரோந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தேர்தல் சமயத்தில் நாடுமுழுவதற்கும் இந்நடவடிக்கை விஸ்தரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தல் பணிகளுக்கு ஊறுவிளை விக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யவே இராணுவம் உதவிக்கு அழைக்கப்படுவதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ)

# சாவகச்சேரி நகரப் பகுதிக்கு மக்கள் கூட்டிச் செல்லப்படுவர்

## வீடுகள், கடைகளைப் பார்க்க வசதி

யாழ்ப்பாணம்,ஒக்.8

சாவகச்சேரி நகரில் உள்ள வீடுகளையும்,வர்த்தகநிலையங்களையும் சென்று பார்ப்பதற்கும் பொருள்களை அங்கிருந்து மீட்டு வரவும் பொதுமக்கள் அனுமதிக்கப்பட உள்ளனர்.

வீடுகளின் உரிமையாளர்களையும், வர்த்தகர்களையும் அங்கு அழைத்துச் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக ஐ.தே.க. சார்பில் போட்டியிடும் யாழ்.மாவட்ட முதன்மைவேட்பாளர் தியாகராஜா மகேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட படைத்தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திராவுடன் தொடர்பு கொண்டு இதற்கான அனுமதியைப் பெற்றுள்ளதாகவும் அவர் கூறினார். சாவகச்சேரி நகருக்குச் சென்று வீடுகளையும், வர்த்தக நிலையங்களையும் பார்வையிட விரும்புவோர் சாவகச்சேரி வணிகர் கழகத்தின் தலைவர், செயலாளரிடமோ அல்லது இலக்கம் 212 ஸ்ரான்லி வீதி, யாழ்.நகரில் இயங்கும் ஐ.தே.கட்சி பணிமனையிலோ தமது பெயர், அடையாள அட்டை இலக்கங்கள் என்பவற்றை உடனடியாகப் பதிவு செய்துகொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

சாவகச்சேரி நகருக்குச் செல்வதற்கும் , அங்கிருந்து பொருள்களை ஏற்றிவருவதற்கும்வேண்டிய வாகன வசதிகளைத் தாம் வழங்க இருப்பதாகவும் வேட்பாளர் மகேஸ்வரன் மேலும் தெரிவித்தார். (ஐ)

## அபகரித்த வாக்காளர் அட்டை மூலம்

# கள்ள வாக்குப் போடுவதை தடுக்க விசேட ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.8

அபகரிக்கப்பட்ட வாக்காளர் அட்டைகளைப் பயன்படுத்தி முறைகேடாக வாக்களிப்பதைத் தடுப்பதற்கு வாக்களிப்பு நிலையங்களில் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் மட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

வாக்காளர் அட்டைகள் அண்மையில் விநியோகிக்கப்பட்ட சமயம் அவை சில இடங்களில் இனந்தெரியாதோரால் அபகரிக்கப்பட்டமை தெரிந்ததே. இத்தகைய வாக்காளர் அட்டைகளைப் பயன்படுத்தி கள்ள வாக்குப் போடுவதைத் தடுக்கவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அபகரிக்கப்பட்ட வாக்காளர் அட்டைகளின் இலக்கங்கள் பட்டியலிடப்பட்டு வாக்களிப்பு நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளன. அந்த இலக்கங்களுக்குரிய வாக்காளர் அட்டைகளைப் பயன்படுத்தி வாக்களிக்க முயல்வோர் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுவர் எனக் கூறப்படுகின்றது. (ஐ-உ)

# மட்டு. விமானத் தளம் மீது புலிகள் ஷெல் வீச்சு!

மட்டக்களப்பு,ஒக்.8

மட்டக்களப்பு விமானப் படைத் தளத்தின் மீது நேற்றுப பிற்பகல் 1.30 மணியளவில் விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

புலிகளால் ஏவப்பட்ட இரண்டு ஷெல்கள் விமானப் படைத்தளத்தின் உட்பகுதிகளில் வீழ்ந்து வெடித்த போதும் சேதம் ஏதும் ஏற்படவில்லை என்று மட்டக்களப்பு படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை - வவுணதீவு இராணுவ முகாமின் முன்னரங்க நிலைகளுக்கு அப்பால் வீதி ரோந்தில் ஈடுபட்ட இராணுவத்தினர் மீது நேற்று முற்பகல் 10.30 மணியளவில் விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

இந்தச்சம்பவத்தை அடுத்து வவுணதீவு இராணுவ முகாமில் இருந்து இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. (ஐ-7-21)

## கூட்டணி கண்டனம்

யாழ்ப்பாணம்,ஒக்.8

யாழ்.மாநகரசபை உறுப்பினர் என்.விஜயரட்ணம் நேற்றுப் பிற்பகல் யாழ்.மாநகரப் பகுதியில் உணவகம் ஒன்றில் வைத்து ஐ.தே.கவின் முதன்மை வேட்பாளர் தி.மகேஸ்வரனால் அவதூறாகத் தூஷிக்கப்பட்டதுடன் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டார் எனவும் -

இந்தச் சம்பவத்தைத் தான் மிகவும் வன்மையாகக் கண்டிப்பதாகவும் -

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட துணைத் தலைவர் வீ.ஆனந்தசங்கரி பத்திரிகைச் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார். (உ-7)

# உயிரிழந்த புலிகள் 22 பேரின் விவரம்

வவுனியா,ஒக்.8

தொடரும் 'ஓயாத அலைகள் 4' நடவடிக்கையின் போது தமது தரப்பில் உயிரிழந்த மேலும் இருபத்திரண்டு பேரின் பெயர் விவரங்களை விடுதலைப்புலிகள் தமது 'புலிகளின் குரல்' வானொலி மூலம் அறிவித்துள்ளனர்.

அவர்களின்பெயர்கள் வருமாறு:-

* லெப்ரினன்ட் நிருனா அல்லது தில்லை அரசி (சேதுபதி மதிவதனி- வட்டக்கச்சி)
* பைந்தமிழ் (லஷ்மணன் லீலா

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை நகரில் தேடுதல்

திருகோணமலை,ஒக்.8

திருகோணமலை நகரும் அதனை அண்டிய பகுதிகளும் நேற்று முற்பகல் 11 மணிமுதல் இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டு பெரும் தேடுதல் நடத்தப்பட்டது. (ஐ-7-21)

## அரசியல் தஞ்சம் கோரி

# உண்ணாவிரதமிருந்த இருவரை ஜேர்மனி திருப்பி அனுப்பியது!

கொழும்பு,ஒக்.8

தம்மைத் திருப்பி அனுப்ப வேண்டாம் எனக்கோரி ஜேர்மனியில் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டவர்களில் இருவர் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

திருப்பி அனுப்பப்பட்ட இவர்கள் இருவரும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்து இறங்கியபோது பொலீஸாரால் விசாரணைக்கு என அழைத்துச் செல்லப்பட்டனர்.

நாகராஜா ராஜகாந்தன் (வயது 28), பொன்னையா குணசிங்கம் (வயது 27) ஆகிய இருவருமே திருப்பி அனுப்பப்பட்டவர்களாவர்.

இவர்கள் இருவரும் தம்மை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப வேண்டாம் எனக்கோரி மேலும் இரு இளைஞர்களுடன் சேர்ந்து கடந்த செப்ரெம்பர் 4ஆம் திகதி தொடக்கம் 26ஆம் திகதிவரை ஜேர்மனியில் சாகும்வரை உண்ணாவிரதம் அனுஷ்டித்து வந்தது தெரிந்ததே.

இவர்களுடன் உண்ணாவிரதம் இருந்த தம்பிராசா மருதேஸ்வரன் என்ற இளைஞரும் எதிர்வரும் 11ஆம் திகதி ஜேர்மனியில் இருந்து திருப்பி அனுப்பப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-5)

## ஆயிரத்து 500 வன்செயல்கள்

நாடு முழுவதும் நேற்றிரவு வரை ஆயிரத்து 500 தேர்தல் வன்செயல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தேர்தல் வன்செயல்களினால் இதுவரையும் 58 பேர் பலியாகியுள்ளார்கள் என்றும் பலர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை -

11ஆவது நாடாளுமன்றத் தேர்தலுக்கான அரசியல் கட்சிகளின் பிரசார நடவடிக்கைகள் நேற்று நள்ளிரவுடன் முடிவடைந்துள்ளன.(ஐ-5-7-8)

## கிளைமோர் மீட்பு

வவுனியா,ஒக்.8

வவுனியா வேப்பங்குளத்துக்கு அண்மையிலுள்ள குளுமாட்டுச் சந்தியில் நேற்றுக் காலை இராணுவத்தினரால் கிளைமோர் கண்ணி ஒன்று மீட்கப்பட்டது. (ஐ-8-5)

# வடக்கு யுத்தத்தில் புலிகளின் கனரக ஆயுதபலம் அதிகரிப்பு!

கொழும்பு,ஒக்.8

புலிகள் வசமுள்ள கனரக ஆயுதங்களின் எண்ணிக்கை திடீரென மிகவும் அதிகரித்திருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பான விவரங்கள் கொழும்பில் வெளிவரும் 'வீக்கன்ட் எக்ஸ்பிரஸ்' வார இதழின் பாதுகாப்பு தொடர்பான கட்டுரை ஒன்றில் வெளியாகி உள்ளன.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ள சில விடயங்கள் வருமாறு:-

மிக அண்மைக்காலத்தில் வடக்கு யுத்தகளத்தில் விடுதலைப் புலிகள் பயன்படுத்தும் பல்குழல் றொக்கட் ஏவுகணைகள், பீரங்கிகள் போன்ற கனரக ஆயுதங்களின் எண்ணிக்கை மிகவும் அதிகரித்திருப்பதை பாதுகாப்பு வட்டாரங்கள் உன்னிப்பாக அவதானித்துள்ளன.

இது, மேற்படி கனரக ஆயுதங்களைப் பெருமளவில் தமது தளங்களுக்குக் கொண்டு வந்து சேர்ப்பதில் புலிகள் வெற்றி கண்டிருப்பார்கள் என்ற சந்தேகத்தை அந்த வட்டாரங்களில் ஏற்படுத்தியுள்ளது.

செப்ரெம்பர் முதல் வாரத்தில் முல்லைத்தீவுக் கடற்பரப்பு ஊடாக பெருமளவு கனரக ஆயுதங்களைப் ... பதாகவும் -

அதன் காரணமாகவே கடந்த வாரத்தில் புலிகளின் கனரக ஆயுத பாவனை பெருமளவில் அதிகரித்திருப்பதாகவும் -

அவ்வட்டாரங்கள் மேலும் உறுதியாக நம்புகின்றன.

ஆனால் கடல் வழியாக புலிகள் ஆயுதங்கள் கொண்டு வந்து சேர்த்

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# நாடாளுமன்றத் தேர்தல் - 2000; விசேட பஸ் சேவை வசதி!

தேர்தல் தினமான 10.10.2000ஆம் திகதி வாக்காளர்கள் தத்தமது வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று வாக்களிப்பதற்கு தெரிவத்தாட்சி அலுவலர் யாழ்ப்பாணம் 10 பணிப்பின் மீது வட பிராந்திய போக்குவரத்துச் சபையால் கீழ்க்குறிப்பிடப்பட்ட பாதை ஊடாக இலவச பேருந்து சேவைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. தனியார் பேருந்துகளும் பயன்படுத்தப்படும்.

* பேருந்து விசேட இலக்கம் 101A, 101B

**இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:-** கோண்டாவில் இந்து ம.வி., நீர்வேலி அத்தியார் இந்து, நெல்லியடி ம.வி.
**பாதை விவரம்:-** வட்டுக்கோட்டையிலிருந்து ஆரம்பித்து நவாலி, ஆனைக்கோட்டை, கொக்குவில், கோண்டாவில், இருபாலை, நீர்வேலி ஊடாக நெல்லியடி சென்று மீண்டும் அதே பாதையால் வட்டுக்கோட்டை வந்தடையும்.
**புறப்படும் நேரம்:** *வட்டுக்கோட்டை*- 7மணி, 8 மணி, 11மணி, 12.30மணி. *நெல்லியடி* - 9மணி, 10மணி, 1.30மணி, 4மணி.

* பேருந்து விசேட இலக்கம் 102A, 102B

**இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:-** மானிப்பாய் மகளிர், மருதனார்மடம் இராமநாதன், கோண்டாவில் இந்து, நீர்வேலி அத்தியார் இந்து, நெல்லியடி ம.வி.
**பாதை விவரம்:-** வட்டுக்கோட்டையிலிருந்து ஆரம்பித்து நவாலி, மானிப்பாய், மருதனார்மடம், கோண்டாவில், இருபாலை, நெல்லியடி மீண்டும் இதே பாதையால் வட்டுக்கோட்டையை வந்தடையும்.
**புறப்படும் நேரம்:-** *வட்டுக்கோட்டை* - 7.30மணி, 8.30மணி, 12.45 மணி, 1.45மணி. *நெல்லியடி* - 10மணி, 11மணி, 3.15மணி, 4.15மணி.

* பேருந்து விசேட இலக்கம் 103A, 103B

**இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:-** சங்கானை சிவப்பிரகாசம் வித்தி., மானிப்பாய் மகளிர், மருதனார்மடம் இராமநாதன், நீர்வேலி அத்தியார் இந்து, நெல்லியடி ம.வி.
**பாதை விவரம்:-** வட்டுக்கோட்டையிலிருந்து ஆரம்பித்து சித்தன்கேணி, சங்கானை, சண்டிலிப்பாய், மானிப்பாய், தாவடி, மருதனார்மடம் சந்தி, உரும்பிராய், கோப்பாய், நீர்வேலி, அச்சுவேலி, நெல்லியடி மீண்டும் இதே பாதையால் வட்டுக்கோட்டை திரும்பும்.
**புறப்படும் நேரம்:-** *வட்டுக்கோட்டை* 7மணி, 9மணி, 11.30மணி, 2மணி. *நெல்லியடி* - 9.15மணி, 11.15மணி, 2.10மணி, 4.15மணி.

* பேருந்து விசேட இலக்கம் 104A, 104B

**இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:-** சங்கானை சிவப்பிரகாசம் வித்தி., மானிப்பாய் மகளிர், கோண்டாவில் இந்து, நீர்வேலி அத்தியார் இந்து, நெல்லியடி ம.வி.
**பாதை விவரம்:-** மூளாயில் ஆரம்பித்து சுழிபுரம், சித்தன்கேணி, சங்கானை, சண்டிலிப்பாய், மானிப்பாய், கோண்டாவில், இருபாலை, நீர்வேலி, அச்சுவேலி, நெல்லியடி இதே பாதையால் மீண்டும் மூளாய் திரும்பும்.
**புறப்படும் நேரம்:-** *மூளாய்* - 7மணி, 7.30மணி, 11.30மணி, 12.30மணி. *நெல்லியடி* - 9.15மணி, 9.45மணி, 11.30மணி, 4. மணி.

* பேருந்து விசேட இலக்கம் 105A, 105B

**இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:-** மருதனார்மடம் இராமநாதன், கோண்டாவில் இந்து ம.வி, நீர்வேலி அத்தியார் இந்து, நெல்லியடி ம.வி.
**பாதை விவரம்:-** மூளாயிலிருந்து ஆரம்பித்து சுழிபுரம், சித்தன்கேணி, சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், மருதனார்மடம் சந்தி, கோண்டாவில், இருபாலை, நீர்வேலி, அச்சுவேலி, நெல்லியடி இதே பாதையால் மீண்டும் மூளாய் திரும்பும்.
**புறப்படும் நேரம்:-** *மூளாய்* - 8மணி, 9மணி, 12.45மணி, 1.45மணி. *நெல்லியடி* - 10.10மணி, 11.10மணி, 2.55மணி, 4மணி.

* பேருந்து விசேட இலக்கம் 106A, 106B

**இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:-** மருதனார்மடம் இராமநாதன், நீர்வேலி அத்தியார் இந்து, நெல்லியடி ம.வி.
**பாதை விவரம்:-** இளவாலையிலிருந்து ஆரம்பித்து பண்டத்தரிப்பு, பிரான்பற்று, தொட்டிலடி, சண்டிலிப்பாய், உடுவில், மருதனார்மடம், உரும்பிராய், கோப்பாய், நீர்வேலி, அச்சுவேலி, நெல்லியடி மீண்டும் இதே பாதையால் இளவாலையை வந்தடையும்.
**புறப்படும் நேரம்:-** *இளவாலை*- 7மணி, 7.30மணி, 11மணி, 11.55 மணி. *நெல்லியடி* - 9மணி, 9.30மணி, 1.25மணி, 4மணி.

* பேருந்து விசேட இலக்கம் 107A, 107B

**இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:-** சங்கானை சிவப்பிரகாசம் வித்தி., மானிப்பாய் மகளிர், கோண்டாவில் இந்து ம.வி, நீர்வேலி அத்தியார் இந்து, நெல்லியடி ம.வி.
**பாதை விவரம்:-** இளவாலை, பண்டத்தரிப்பு, சித்தன்கேணி, சங்கானை, சண்டிலிப்பாய், மானிப்பாய், தாவடி, கோண்டாவில், இருபாலை, நீர்வேலி, அச்சுவேலி, நெல்லியடி மீண்டும் இதேபாதையால் இளவாலையை வந்தடையும்.
**புறப்படும் நேரம்:-** *இளவாலை* - 8.மணி, 9மணி, 1.05மணி, 2.05மணி. *நெல்லியடி* - 10.20மணி, 11மணி, 3.25மணி, 4.25மணி.

* பேருந்து விசேட இலக்கம் 108A, 108B

**இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:-** மருதனார்மடம் இராமநாதன், கோண்டாவில் இந்து ம.வி, நீர்வேலி அத்தியார் இந்து., நெல்லியடி ம.வி
**பாதை விவரம்:-** தெல்லிப்பழை, மல்லாகம், சுன்னாகம், மருதனார்மடம், கோண்டாவில், இருபாலை, நீர்வேலி, அச்சுவேலி, நெல்லியடி மீண்டும் இதே பாதையால் தெல்லிப்பழை திரும்பும்.
**புறப்படும் நேரங்கள்:-** *தெல்லிப்பழை* - 7மணி, 7.30மணி, 10.40மணி, 11.15 மணி. *நெல்லியடி* - 8.50மணி, 9.20மணி, 2மணி, 4மணி.

* பேருந்து விசேட இலக்கம் 109A, 109B

**இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:-** மருதனார்மடம் இராமநாதன், மானிப்பாய் மகளிர், கோண்டாவில் இந்து ம.வி, நீர்வேலி அத்தியார், நெல்லியடி ம.வி.
**பாதை விவரம்:-** தெல்லிப்பழை, மல்லாகம், சுன்னாகம், மருதனார்மடம், மானிப்பாய், தாவடி, கோண்டாவில், இருபாலை, நீர்வேலி, அச்சுவேலி, நெல்லியடி மீண்டும் இதே பாதையால் தெல்லிப்பழை திரும்பும்.
**புறப்படும் நேரங்கள்-** *தெல்லிப்பழை* - 8மணி, 9மணி, 1மணி, 1.55மணி. *நெல்லியடி* - 10.15மணி. 11.15மணி, 3.15மணி, 4.10மணி.

* பேருந்து விசேட இலக்கம் 110A, 110B

**இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:-** சங்கானை சிவப்பிரகாசம் வித்தி., மானிப்பாய் மகளிர், மருதனார்மடம் இராமநாதன், நீரவேலி அத்தியார், நெல்லியடி ம.வி.
**பாதை விவரம்:-** தெல்லிப்பழை, மல்லாகம், சுன்னாகம், கந்தரோடை, மாசியப்பிட்டி, தொட்டிலடி, சங்கானை, மானிப்பாய், தாவடி, மருதனார்மடம், உரும்பிராய், கோப்பாய், நீர்வேலி, அச்சுவேலி, நெல்லியடி.
**புறப்படும் நேரங்கள்:-** *தெல்லிப்பழை* - 7.30மணி, 8.30மணி, 1.05மணி, 2.05மணி. *நெல்லியடி* - 10.05மணி, 11.05மணி, 4மணி. *நீர்வேலி* - 3.50மணி (நீர்வேலி அத்தியார்).

* பேருந்து விசேட இலக்கம் 111A, 111B

**இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:-** கோண்டாவில் இந்து ம.வி, நீர்வேலி அத்தியார், நெல்லியடி ம.வி.
**பாதை விவரம்:** யாழ்ப்பாணம், திருநெல்வேலி, கோண்டாவில், இருபாலை, நீர்வேலி, அச்சுவேலி, நெல்லியடி மீண்டும் இதே பாதையால் யாழ்ப்பாணம் வந்தடையும்.
**புறப்படும் நேரங்கள்:-** *யாழ்ப்பாணம்* - 7மணி, 8மணி, 10.30மணி, 11.30மணி, 2.25மணி. *நெல்லியடி* - 8.45மணி, 9.45மணி, 12.40மணி, 1.40மணி, 4.10மணி.

**ஏனைய விசேட போக்குவரத்து வசதி பற்றிய விவரம் நாளை வெளியிடப்படும்.**

**தேர்தல் மாவட்டம் 10** (C/13293) **- தெரிவத்தாட்சி அலுவலர்**




## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்
## 2000-10-10

**யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்**
**தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளரான**
**தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்**

## திரு.சி.சிவமகாராசா

அவர்களை ஆதரியுங்கள்.



இல. 11

| தமிழர் விடுதலைக் கூட்டணி | | X |
|---|---|---|

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| ~~11~~ | 12 | | | | | | | | |

உதயசூரியன் சின்னத்துக்கு நேரே புள்ளடியிட்டும் இலக்கம் 11க்கு மேலே புள்ளடியிட்டும் வெற்றிபெறச் செய்வதுடன் மேலும் விரும்பிய இரு இலக்கத்திற்கு மேல் புள்ளடியிடலாம்.

(79228)

## நாடாளுமன்றத் தேர்தல் - 2000

**யாழ். இந்துக் கல்லூரியின் கல்விசார் சமூகத்துக்கு.....!**

*நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில்*
*எமது கல்லூரியின் பழைய மாணவன்*

## எஸ்.ஸ்ரீகஜன்

போட்டியிடுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.
எமது நண்பன **ஸ்ரீகஜனை** வெற்றிபெறச் செய்வதற்கு யானைச் சின்னத்துக்கு வாக்களித்து அவரின் இலக்கமான 8க்கு நேராகவும் புள்ளடியிடுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.



**எஸ்.ஸ்ரீகஜன்**
(பத்திரிகையாளர்)

| ஐக்கிய தேசியக் கட்சி | | X |
|---|---|---|

இலக்கம் ~~8~~

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | ~~8~~ | 9 | 10 |
| 11 | 12 | ஸ்ரீகஜனை பெரு வெற்றி பெறச் செய்வோம்! | | | | | | | |

யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவ நண்பர்கள்.

(79231)


## கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 29 - 03 - 1965 | 06 - 10 - 2000 |

## அமரர் ஆறுமுகம் முருகேசு

சிந்தையில் நிலைத்து நின்றாய்
இல்லத்தின் சுடர் விளக்காய்
சுடர்விட்டுப் பிரகாசித்து நின்றாய்
ஞானமதில் நாம் கண்டு மகிழ
சீலமுடன் சீவித்தவனே - உன்னை
காலனுனை கவர்ந்திழுத்த
கதியென்ன காண்கிலோம்
உற்றாரும் உளம் உருக - நீ
பெற்றெடுத்த பாலகரும்
பற்றறுத்து பரிதவிக்கையிலே - நீ
விந்தையாய் மறைந்ததேனோ
எம்மை ஆளாத்துயரில் ஆழ்த்தி
மீளாத்துயில் கொள்வதேனோ?

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உமது பிரிவால் துயருறும்:
**யாழ்.அங்காடி வியாபாரிகளும், நண்பர்களும்.**

(79293)


## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2000
## (நடராஜ ராஜசூரிய)



நடராஜ ராஜசூரிய

பாண்டியன்தாழ்வு கொழும்புத்துறையைச் சேர்ந்த நடராஜவின் மகனும் வண்ணார்பண்ணை K.K.S. ரோட், பேருவலை பொன்னுத்துரையின் மருமகனும் முன்னாள் ஈராக் தொழிலதிபரும் கட்டடக் கலைஞரும் (Architect) ஆகிய ராஜசூரிய

| அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் | | X |
|---|---|---|



அமரர் மாமனிதர்
**குமார் பொன்னம்பலம்**

உங்களது வாக்குகளை சைக்கிள் சின்னத்துக்கு நேரே உள்ள பெட்டியிலும் இலக்கம் 8க்கும் புள்ளடி இடும்படி கேட்டுக் கொள்கின்றேன். உங்கள் பலரை நேரடியாக சந்திக்க முடியவில்லை. இருந்தும் உங்கள் ஆதரவை கண்டு பெருமைப்படுகின்றோம். நன்றி.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | ~~8~~ | 9 | 10 |
| 11 | 12 | | | | | | | | |

இல. ~~8~~

(79230)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொன்னையா சிவபாதம்

# நாடாளுமன்றத் தேர்தல் - 2000 யாழ். மாவட்டம்

## திரு. பொன்னையா சிவபாதம்

### ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் இல. 6

அன்பார்ந்த வாக்காளப் பெருமக்களே!
அடக்குமுறைக்கு எதிராகவும் சமூக அட்டூழியங்களுக்கு எதிராகவும் சிறுவயது முதல் குரல் கொடுத்தவன்!
கூட்டுறவுத் துறையில் தமது பணியின் மூலம் கூட்டுறவுத் தொழிலாளர்களின் அநீதிகளுக்கு எதிராக உழைத்தவன்!
மக்கள் தொண்டனாக வாழ்ந்தவன்!
ஆகவே உங்களுடைய வாக்குகளை யானைக்கும் அவரது இலக்கமாகிய 6 க்கும்
எமது முதன்மை வேட்பாளரது இலக்கம் 4 க்கும் அளித்து
எமது வெற்றியை உறுதிப்படுத்துவீர்களாக!



தி.மகேஸ்வரன்
(முதன்மை வேட்பாளர்)

*வடமராட்சி மக்கள், பருத்தித்துறை வர்த்தக கழக நண்பர்கள்.*

(C/13288)



# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2000

* **வீரகேசரிப் பத்திரிகையாளர்**
* **யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவன்**
* **ஐ.பி.சியில் ஆஞ்சனேயர்**

யாழ்ப்பாணம் கலட்டியைப் பிறப்பிடமாகவும், குடக்கர் பொன்னுத்துரை, பேராலை பளையைச் சேர்ந்த விசுவநாதர் (முருகரின்) பேரனுமான சந்திரலிங்கம் ஸ்ரீகஜனை பெருவெற்றி அடையச் செய்வோம்.

* குடாநாட்டுத் தமிழ்மக்களின் துயர அவலங்களை சர்வதேசமெங்கும் தெரியப்படுத்திய ஸ்ரீகஜனே எமது தெரிவாகட்டும்!
* சிறையில் பல மாதங்கள் விடுதலைப் புலிகளுடன் தொடர்பென்ற குற்றச்சாட்டின் பேரில் தடுத்து வைக்கப்பட்ட எஸ்.ஸ்ரீகஜனுக்கு தமிழ் இளைஞர், யுவதிகள் படும் வேதனைகள் நன்கு தெரியும்! சிறையில் உள்ள தமிழர்களின் விடிவுக்கு எமது தெரிவு ஸ்ரீகஜனே!
* **இடம்பெயர்ந்து அல்லல்படும் மக்களின் மீட்சிக்கு எமது தெரிவு ஸ்ரீகஜனே!**

| | | | |
|---|---|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி |  | X | இலக்கம் 8 (X) |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 (X) | 9 | 10 |
| 11 | 12 | | | | | | | | |

**எஸ்.ஸ்ரீகஜனின் வெற்றி எமது வெற்றி!**



**எஸ்.ஸ்ரீகஜன்**
**(ஆஞ்சனேயர், பத்திரிகையாளர்)**

(79232)



# வாக்காளர் கவனத்திற்கு!

- உங்கள் வாக்குகள் ஓர் அரசையே மாற்றும் வலிமை வாய்ந்தவை.
- வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக உணவுப் பொருட்களும், உடுபுடவைகளும், வாக்குறுதிகளும் வாரி வழங்குவதிலிருந்து உங்கள் வாக்குகளின் வலிமையை நீங்கள் புரிந்து கொள்ளலாம்.
- உங்கள் வாக்குகளை நீங்களே உபயோகிக்கத் தவறினால் கள்ள வாக்குகள் போட ஏதுவாகும் என்பதால் உங்கள் வாக்குகளை நீங்களே உபயோகப்படுத்துங்கள்.
- இந்த விளம்பரம் உங்களுக்கு வாக்குறுதிகளை வழங்குவதற்காக அல்ல: உங்களுக்கு விளிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவே.



நா.இ.இராமேஸ்வரன் (மதன்)
முன்னாள் பா.உறுப்பினர்,
தலைவர், மக்கள் ஜனநாயகப் பேரவை

# இல: 5

## வாக்களிப்பது எப்படி?

- நீங்கள் விரும்பும் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவின் சின்னத்திற்கு நேரே புள்ளடி இடவும்.
- மீண்டும் வாக்குச்சீட்டின் கீழுள்ள பன்னிரண்டு இலக்கங்களுள் உங்கள் விருப்புக்குரியவர்கள் மூவரின் இலக்கங்களின் மீது புள்ளடி இடவும்.

## உதாரணமாக:

எமக்கு வாக்களிப்பதாயின் கீழே உள்ளது போல் முதலில் மீனுக்கு நேராக புள்ளடியிடவும், மீண்டும் இலக்கம் 5 இன் மீதும் வேறு இரண்டு இலக்கங்களின் மீதும் புள்ளடியிட்டு உங்கள் வாக்குரிமையை முழுமையாகப் பயன்படுத்துங்கள்.

| | | |
|---|---|---|
| சுயேச்சைக் குழு 2 |  | X |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 (X) | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | | | | | | | | |

குறிப்பு: விசேட பிரயாண ஒழுங்குகள் 10.10.2000 ஆம் திகதி அன்று தெரிவத்தாட்சி அலுவலரினால் செய்து கொடுக்கப்படும்.

மக்கள் ஜனநாயகப் பேரவை
முதலாம் குறுக்குத் தெரு,
வேம்படி, யாழ்ப்பாணம்.
தொலை பேசி:- 2705

**நாம் என்றும் உங்கள் தேவை அறிந்து சேவை செய்வோம்.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆரம்பம் 06-06-1975

போன் 2789

# நன்றி கூறுகின்றோம்



எமது வெள்ளி விழாவுக்கு சமுகந் தந்து கௌரவித்த அன்புள்ளம் கொண்டவர்களுக்கும் உதவி ஒத்துழைத்தவர்களுக்கும் இரு கரம் கூப்பி நன்றி கூறுகின்றோம்.

# தேவி அச்சகம்

114/19, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(தேவி அச்சக ஒழுங்கை)

(79271)


## கத்தி வெட்டில் இளம் குடும்பஸ்தர் காயம்

தென்மராட்சி ஒக். 8

கத்தி வெட்டுக்கு உள்ளான இளம் குடும்பஸ்தர் ஒருவர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துன்னாலை தெற்கைச் சேர்ந்த கேட்சுனன் நாகேந்திரன் வயது (30) என்பவரே காயமடைந்தவராவார்.

(இ-117)


யா/செம்பியன்பற்று, அ.த.க. பாடசாலை

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2000

வன்னியில் இருந்து தோற்றி சித்தி பெற்ற மாணவி

**செல்வி சுந்தரலிங்கம் பிரதீபா - 139 புள்ளி**

என்பவரையும்

100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற இரு மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(C/13280)



காரைநகர், ஊர்காவற்றுறை முன்னாள் பிரபல வர்த்தகர் விசுவப்பாவின் மகன்

**வைத்திலிங்கம்** அவர்கள்

வட்டுக்கோட்டைத் தொகுதியைச் சேர்ந்தவர்...கூட்டணியின் யாழ். மாவட்ட வேட்பாளராக வருகின்றார்...இவர் யாழ். மாநகர சபையில் கணக்காய்வாளராகவும், உள்துறை அமைச்சு நிர்வாக உத்தியோகத்தராகவும், மூதூர் பிரதேச உதவி அரசாங்க அதிபராகவும் நேர்மையுடன் பணியாற்றியவர்... மிகச் சிறந்த கல்விமான்...அநீதிகளை எதிர்க்கும் வல்லமை கொண்டவர்... கறைபடியாத கரங்களை உடையவர்...

அவருக்கே உங்கள் வாக்கு! இல. 8



வி. வைத்திலிங்கம்

(முன்னாள் உதவி அரச அதிபர்)

| தமிழர் விடுதலைக் கூட்டணி | (சூரியன்) | X |
|---|---|---|

1 2 3 4 5 6 7 ~~8~~ 9 10 11 12

சத்தியத்தை நேசிப்பவர் நீங்கள்

எனவே விருப்பு வாக்கில் ஒன்றை 8க்கு அளியுங்கள்!

மாநகர சபை ஊழியர்கள்

(79219)


# 31 ஆம் நாள் நினைவலைகள்

உதயம் 30 - 12 - 1919



அஸ்தமனம் 08 - 09 - 2000

## திருமதி இராசபூபதி கந்தையா

(முன்னாள் ஆங்கில ஆசிரியர், யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி)

இல்லத்தின் அகல் விளக்காய் - என்றும்
கல்வியில் ஒளிவீசி - புகழ் பூத்து
நல்வழி காட்டிய எம் அம்மாவே, அம்மம்மாவே
நாமெல்லாம் ஒன்றுகூடி வேண்டுகின்றோம் இறைவனை
உன் ஆத்ம சாந்திக்காக!

எமது குடும்பத் தலைவியின் துயரில் பங்கு கொண்டு எமக்கு பல்வேறு வகைகளில் ஆறுதலளித்த அன்பு நெஞ்சங்களுக்கு எமது உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இன்று (08-10-2000) ஞாயிறு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அனைவரையும அன்புடன் அழைக்கின்றோம்

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*"கந்தபதி"*
*நுணாவில் கிழக்கு,*
*சாவகச்சேரி.*

தற்போதைய முகவரி:
*"லக்சுமி வாசா"*
*இணுவில் - மானிப்பாய் வீதி,*
*சுதுமலை வடக்கு, மானிப்பாய்.*

(C/13187)


# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2000

யாழ். மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிடும் வர்த்தகர்

**சி.இ.கோபாலப்பிள்ளை ஜெந்திரா**

அவர்கள் பரிபூரணமாக வெற்றி பெற ஆதரவளிப்போம்!

| ஐக்கியதேசியக் கட்சி | (யானை) | X |
|---|---|---|

1 2 ~~3~~ 4 5 6 7 8 9 10 11 12



கோபாலப்பிள்ளை ஜெயேந்திரா

இல ~~3~~

நல்லூர், நாயன்மார், அரியாலை வாழ்மக்கள்.

(79222)


# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14 - 02 - 1930



மறைவு 21 - 09 - 1999

அமரர்

## இராமுப்பிள்ளை சின்னத்தம்பி

(முன்னாள் உரிமையாளர், ஸ்ரீதேவி ஸ்ரோர்ஸ், கடவத்தை)

ஆறுதல் சொல்ல யாரிருந்தென்ன - உங்கள்
ஆருயிர் அன்பிற்கு ஈடாகுமோ?
தேறுதல் சொல்ல தெய்வம் வந்தென்ன அப்பா! - உங்கள்
திருமுகம் பார்த்தால் போதாதோ?
எம் உள்ளங்கள் துடித்திட நீங்கள்
எங்கு சென்றீர்கள் அப்பா?
ஆண்டு ஒன்று சென்றாலும் - உங்கள்நினைவுகள்
என்றும் எம்மை விட்டு நீங்காது.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பிரிவால் துயருறும்

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*கருங்காலி,*
*காரைநகர்.*

(79166)


# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2000

# ஜனநாயக இடது சாரி முன்னணி



சி.கா.செந்திவேல்
முதன்மை வேட்பாளர்
இல. 7

அற்ப சலுகைகளுக்காக
அடுத்த சந்ததியினரையும்
அடிமைகளாக்காது
சொந்த மண்ணில்
சுதந்திரமாக உழைத்து வாழவும்
தூர நோக்கற்ற
பழையதலைமைகளை நிராகரித்து
புதிய அரசியல் விழிப்புணர்வுடன்
முன் செல்லவும்
வாக்களிப்போம்



வாசுதேவ நாணயக்கார



சட்டத்தரணி ஜே. தேவராஜா
இல. 12

(சுவர்க் கடிகாரம்) X



சந்திரா நவரட்ணம்
இல. 8

(79221)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2000


தந்தை செல்வா

★ தமிழ் மக்களின் அபிலாசைகள் அனைத்தையும் உள்ளடக்கிய காத்திரமான ஓர் அரசியல் தீர்வுக்காகக் குரல் கொடுக்க -
★ போரை நிறுத்தி அகதிகளாக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களின் துயரங்களை, அவர்களின் இதய உணர்வலைகளை அக்கறையுடன் எடுத்துரைக்க -
★ சமாதானத்தினதும், மனித நேயத்தினதும், தமிழ்த் தேசியத்தினதும் விசுவாசமான குரலாக நாடாளுமன்றத்தின் உள்ளும் புறமும் ஒலிக்க -
உங்கள் ஆதரவை வேண்டி நிற்கின்றேன்

| தமிழர் விடுதலைக் கூட்டணி | (சூரியன்) | X |
|---|---|---|

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ~~4~~ | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | | | | | | | | |


க.சி.பாலகிருஷ்ணன் J.P.U.M.
சட்டத்தரணியும், உத்தியோகப்பற்றற்ற நீதிவானும்.
க.பி.பாலகிருஷ்ணன்
இல.4
(78930)



மாவை/கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட
காலஞ்சென்ற திரு. வே.தி.நடராஜா அவர்களின் புதல்வனும்
இளம் சட்டத்தரணியுமான
**திரு.ந. இரவிராஜ்** (பிரதி முதல்வர் யாழ்.மாநகரசபை)
அவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் எதிர்வரும் பொதுத்தேர்தலில் வேட்பாளராக நியமிக்கப்பட்டதனை பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர் வெற்றிபெற தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னமாகிய உதயசூரியனுக்கு வாக்களித்து எமது விருப்பு வாக்கின் ஒன்றினை இவரது இலக்கமாகிய 6க்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்வோமாக!

## தமிழர் விடுதலைக் கூட்டணி நடராஜா இரவிராஜ் இல.6


நடராஜா இரவிராஜ்
சட்டத்தரணி
பிரதி நகர பிதா
யாழ்.மாநகர சபை

| தமிழர் விடுதலைக் கூட்டணி | (சூரியன்) | X |
|---|---|---|

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | ~~6~~ | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | | | | | | | | |

- நேர்மை, உண்மை, இலட்சியத்துக்கான அயராத உழைப்பு
*ஈச்சமோட்டை, உற்றார் உறவினர், நண்பர்கள்*
(79218)



# யாழ்.மாவட்டம் - பொதுத் தேர்தல் - 2000


கோப்பாய் கோமான்
கு.வன்னியசிங்கம்


தமிழரசு
க.சின்னத்துரை

அன்புக்குரிய வாக்காளப் பெருமக்களே!
எனது அரசியல் நண்பர்களே!
உதய சூரியனுக்கு ☒ இட்டு
தமிழர் விடுதலைக் கூட்டணியை
வெற்றி பெறச் செய்யுங்கள்

| (சூரியன்) | X |
|---|---|
| க.சின்னத்துரை | ~~10~~ |

எனது இலக்கமான 10க்கு மேலே புள்ளடி இட்டு ஆதரியுங்கள்.
உங்கள் ஆதரவை வேண்டி நிற்கும்
(தமிழரசு) க.சின்னத்துரை
உப தலைவர், தமிழர் விடுதலைக் கூட்டணி.


மூதறிஞர்
சா.ஜே.வே.செல்வநாயகம் Q.C
(79214)



# யாழ்.மாவட்ட வாக்காளப் பெருமக்களே!

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. அப்பாத்துரை விநாயகமூர்த்தி அவர்களை அக்கட்சி சார்பில் தலைமை வேட்பாளராக யாழ்.மாவட்டத்தில் நிறுத்தியது ஏன்?


அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம்




திரு. அ.விநாயகமூர்த்தி

→ 2


மாமனிதர் குமார்

திரு. அப்பாத்துரை விநாயகமூர்த்தி அவர்கள் அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களால் 29-08-1944இல் ஸ்தாபிக்கப்பட்ட அ.இ.த.காங்கிரஸ் கட்சியில் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக கட்சியில் தொடர்ந்து அக்கட்சியிலிருந்து விலகாது அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களுடனும் அவர் இறந்ததும் அவரின் அடிச்சுவட்டில் அக்கட்சியை பொறுப்பேற்று நடத்தி வந்த அவரின் மைந்தன் மாமனிதர் குமார் பொன்னம்பலத்துடனும் பக்கபலமாகச் செயற்பட்டவர். மேலும் 1979ஆம் ஆண்டு பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு சிறைச்சாலைகளில் வைத்து துன்புறுத்தப்பட்டுவரும் அப்பாவித் தமிழ் இளைஞர்களின் விடுதலைக்காக மாமனிதர் குமார் பொன்னம்பலத்துடனும் தனியாகவும் நின்று செயற்படுபவர். அமரர் மாமனிதர் குமார் பொன்னம்பலம் இறந்ததும் அவரின் வழியில் நின்று செயற்படுபவர். அதற்கு ஆதாரமாக அவர் இம்முறை தேர்தல் பிரசாரத்தில் ரூபவாஹினியிலும் வானொலியிலும் ஆற்றிய உரைகள், அத்துடன் மாமனிதர் குமார் கொலை செய்யப்பட்டதும் குமாரின் கொலைக்கு அரசாங்கமும் பொறுப்பென பகிரங்கமாகப் பத்திரிகைகளில் அறிக்கை விட்டதுடன் இன்றைய ஜனாதிபதிக்கும் நேரடியாகக் கடிதம் எழுதியவர். ஆகவே அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சின்னமான சைக்கிளுக்கு நேரே புள்ளடியிட்டு திரு. விநாயகமூர்த்தி அவர்களின் இலக்கம் 2க்கு மேல் புள்ளடியிட்டு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் யாழ். மாவட்ட பிரதிநிதியாக நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பச் செய்ய வேண்டும்.

| அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் | (சைக்கிள்) | X |
|---|---|---|
| அப்பாத்துரை விநாயகமூர்த்தி | ~~2~~ | |

**2** இலக்கத்துக்கு மேல் புள்ளடியிடவும்
(78924)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தற்கொலைக் குண்டுதாரிகளால் அச்சம்

# கொழும்புப் பகுதியில் பாதுகாப்பை பலப்படுத்த ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு,ஒக்.8

கொழும்பில் தற்கொலைக் குண்டுத்தாக்குதல் இடம்பெறக் கூடிய சாத்தியம் ஏற்பட்டுள்ளதால் பாதுகாப்பைப் பலப்படுத்த நடவடிக்கை எடுக்கும்படி ஜனாதிபதி பொலீஸாருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

தேர்தல் காலத்தில் கொழும்பிலும் அதன் சுற்றுப்பிரதேசத்திலும் தற்கொலைத் தாக்குதல் இடம் பெறும் சாத்தியம் உள்ளதால் பாதுகாப்பைப் பலப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஜனாதிபதி இந்த உத்தரவில் தெரிவித்துள்ளார்.

அதேசமயம் - தேர்தல் வன்முறைகள் அதிகரித்து தேர்தலை ஜனநாயக முறைப்படி நடத்தமுடியாது போனால், தேர்தலை ரத்துச் செய்துவிடுவோம் என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணிப் பொதுச் செயலாளர் டி.எம்.ஜெயரத்தின தெரிவித்தார். (இ-3)

# போசாக்குக் கல்வி குறித்து நெடுந்தீவில் இன்று கருத்தரங்கு

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஏற்பாடு செய்துள்ள போசாக்குக் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாசாலையில் பாடசாலை மாணவர்களுக்கான கருத்தரங்கு நடைபெறும்.

வைத்திய அதிகாரி ஆ.திருநாவுக்கரசு பொதுச் சுகாதார சௌக்கியமாது திருமதி மு.முத்துக்குமாரசுவாமி மற்றும் ஊர்காவற்றுறைக்கான சுகாதாரப் பொறுப்பதிகாரி ச.திவ்வியகுமாரன், சுகாதாரப்பரிசோதகர் சி.அருந்தவராசா, மாவலித்துறை றோ.க.வித்தியாலய அதிபர் திருமதி பி.பி.ஜே.தோமஸ் ஆகியோர் இந்தக் கருத்தரங்கில் கருத்துரை வழங்குவர்.

நெடுந்தீவுப் பகுதிக்கான அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர் ம.றோய் டீ.ராஜன் இந்தக் கருத்தரங்குக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார். (ஓ-7)

# தேர்தலை நிராகரிக்குமாறு கோரி பல்கலைக்கழகத்தில் சுவரொட்டி!

நாளைமறுதினம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை நிராகரிக்குமாறு கோரி யாழ்.பல்கலைக் கழக வளாகத்தின் பல இடங்களிலும் பல்கலைக்கழக மாணவர்கள் என்ற பெயரில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணி உபதலைவர் வீ.ஆனந்தசங்கரி, தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அ.விநாயகமூர்த்தி, ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, புளொட் தலைவர் த.சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ் அணிகளைச் சேர்ந்த வரதராஜப்பெருமாள், சுரேஷ் பிரேமச்சந்திரன், ரெலோ முதல்வர் என்.சிறிகாந்தா ஆகியோரின் படங்களுடன் கூடிய இந்தப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழர் பிரதிநிதிகள் எனக்கூறிக் கொண்டு எமது தேசியத்தினை விற்று வயிறு பிழைக்கின்ற தமிழ் துரோகக் கும்பல்களையும், எமக்குச் சற்றேனும் பயனில்லாத பேரினவாதிகளின் நலன்களுக்காக நடத்தப்படும் தேர்தலையும் ஒட்டு மொத்தமாக தமிழ் மக்களாகிய நாம் நிராகரிப்போமாயின் அது எமது சுபீட்சமான எதிர்காலத்திற்கு விடிவெள்ளியாக அமையும்.

இப்படி அந்தப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துண்டுப் பிரசுரத்தின் அடியில் 'யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் - யாழ்ப்பாணம்' என்று அச்சிடப்பட்டுள்ளது. (ஓ-5)

# ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா

யாழ்.வண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானத்தின் 'சரணம் காமாக்ஷி' ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலய முன்றலில் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் இ.வே.கந்தசாமி தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகரசபை ஆணையாளர் வே.பொ.பாலசிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேசசெயலர் கலாநிதி க.குணராசா, யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப் பீட நடனத்துறைத் தலைவர் கலாநிதி சபா.ஜெயராசா, இசைத்துறைத் தலைவர் நா.வி.மு.நவரத்தினம் ஆகியோரும் கலந்து கொள்வர். (ஐ-3-ரி)

# தீவக வலயப் பாடசாலைகளில் சுகாதாரக் கழகம்

தீவகக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் சுகாதாரக் கழகங்கள் அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாணவர்கள் மத்தியில் சுகாதாரம் தொடர்பாகக் காணப்படும் பிரச்சினைகளை இனம் கண்டு அவற்றுக்குத் தீர்வு காணும் வகையிலேயே இந்தச் சுகாதாரக் கழகங்கள் நிறுவப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-7)

# ஆண்ட தமிழினம் மீண்டும் அரசாள....!

**அன்புக்குரிய தமிழ்ச் சகோதர சகோதரிகளே...!**



எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில், யாழ்ப்பாண மாவட்டத்தில் சுயேச்சைக் குழுவாக, சட்டத்தரணி ந.சிறீகாந்தாவின் தலைமையில், கப்பல் சின்னத்தின் கீழ் போட்டியிடும் நாம், ஏன், எதற்காக இந்தத் தேர்தலில் உங்கள் ஆதரவை வேண்டி நிற்கின்றோம் என்பதை எடுத்துக்கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

தொடரும் போரின் கோரப் பிடியில் சிக்கித் திணறிக்கொண்டிருக்கும் தமிழினம் சுயமரியாதையுடனும் பாதுகாப்புடனும் கூடிய அமைதி வாழ்வுக்காக ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கின்றது.

அதே நேரத்தில், 17 ஆண்டுகளுக்கு முன்னர், 1983 ஆம் ஆண்டு ஆடி மாதம் தென்னிலங்கை முழுவதிலும் அன்றைய ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தினால் கட்டவிழ்த்து விடப்பட்ட இனப்படுகொலைத் தாக்குதலைத் தொடர்ந்து வீறு கொண்டெழுந்த எம் இளைய தலைமுறையின் போராட்டம் இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

கடந்த 17 ஆண்டு காலமாக தமிழினம் சந்தித்திருக்கும் உயிர்ப்பலிகள், உடைமையழிப்புக்கள், சிறைக்கொடுமைகள், சித்திரவதைகள், மானபங்கங்கள், அவமதிப்புக்கள் வார்த்தைகளால் விவரிக்கப்பட முடியாதவை.

தாம் பிறந்து வளர்ந்து வாழ்ந்து வந்த மண்ணிலேயே எமது மக்கள் அகதிகளாகி அல்லற்பட்டு அலைந்து கொண்டிருக்கின்றனர்.

அந்நிய நாடு ஒன்றின் மீது போர் தொடுத்திருப்பதைப் போல, தமிழ் மண்ணில் தொடரும் தாக்குதல் நடவடிக்கைகளினால், எமது ஜீவபூமி மெல்ல மெல்ல மயான பூமியாக மாற்றப் பட்டுக்கொண்டிருக்கின்றது.

இருந்தும், சமாதான தேவதையாக வேஷமிட்டு ஆறு ஆண்டுகளுக்கு முன்பு ஆட்சியைப் பிடித்த சந்திரிகா அம்மையாரின் அரசு போரை நடத்திக் கொண்டே வெளிநாடுகளை ஏமாற்ற சமாதானத்தைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றது.

போரை உடனடியாக நிறுத்தி, இலங்கையின் இனப் பிரச்சினையில் விசுவாசமான அக்கறை கொண்டுள்ள வெளிநாடு ஒன்றின் மத்தியஸ்த உதவியுடன், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி, தமிழ்த் தேசிய இனத்தின் தனித்துவத்தையும், தாயகத்தையும், சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரித்து, இனப்பிரச்சினைக்கு நீதியானதும் நிரந்தரமானதுமான அரசியல் தீர்வினைக் காண்பதற்குப் பதிலாக, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் அவரின் அரசும், அரை-குறையான அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றை தம் மனம் போனபடி தயாரித்து தமிழ் இனத்தின் மீது கடந்த ஆவணி மாதம் திணிக்க முயன்றதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

தமிழ் இனத்தின் மரபுவழித் தாயகமான வடகீழ் மாகாணத்தை, வடக்கு என்றும் கிழக்கு என்றும் இரண்டாக வெட்டிப் பிளப்பதற்கு திட்டவட்டமாக வழிவகுக்கும் ஒரு வாக்கெடுப்பினை இந்த அரை-குறைத் தீர்வுத்திட்டம் கொண்டிருக்கின்றது.

அது மட்டுமல்லாமல், எமது தாய் மொழியான தமிழ் மொழியைப் போலவே, நாம் அனைவரும் எம் விழியென நேசிக்கும் எமது மதங்களை இரண்டாம் இடத்திற்குத் தள்ளி, புத்த மதத்திற்கு முதல் இடத்தையும் பரிபூரண அரச போஷிப்பையும் இந்த அரை- குறைத் தீர்வுத்திட்டம் உறுதிப்படுத்துகின்றது.

1948இல், இலங்கைத்தீவு வெள்ளையர் ஆட்சியிலிருந்து விடுபட்ட காலம் முதல், பெரும்பான்மையினரான சிங்கள பௌத்தர்களின் அதிகாரப் பிடிக்குள் ஆட்சிப்பீடம் இருப்பதை நிச்சயப்படுத்தி வந்திருக்கும் ஒற்றையாட்சி எனப்படும் பெரும்பான்மையினரின் ஆட்சி தொடர்வதையும் இந்த அரை-குறைத் தீர்வுத்திட்டம் உறுதிப்படுத்துகின்றது.

அதிகாரப் பரவலாக்கல் என்ற பெயரில், அற்ப சொற்ப அதிகாரங்களை மாத்திரம் வெறும் எலும்புத் துண்டுகளாக எம்மினத்தை நோக்கி வீசி எறிந்துவிட்டு, எமது ஜீவ பூமியில் உள்ள அரசாங்க காணிகள் மற்றும் காடுகள் அனைத்தையும் பெரும்பான்மை இனத்தின் பிடிக்குள் வைத்திருக்கவும், தேவைப்படும் போது எமது மண்ணின் மீதும் மக்களின் மீதும் தேசிய நெருக்கடி

**சட்டத்தரணி ந.சிறீகாந்தா தலைமையில் போட்டியிடும்**
**ரெலோ ஆதரவு சுயேச்சைக் குழுவின் தேர்தல் விஞ்ஞாபனம்**

என்ற பெயரில் அரச முப்படைகளையும் ஏவிவிடவும் தேவையான சகல அதிகாரங்களும் பெரும்பான்மை இனத்தின் பிரதிநிதியான சிங்கள பௌத்த மத்திய அரசாங்கத்திடம் குவிந்திருக்கவும் இந்த அரை குறைத் தீர்வுத் திட்டம் வழி வகுக்கின்றது.

சுய மரியாதை கொண்ட எந்தவொரு தமிழ் மகனோ, மகளோ கனவிலும் ஏற்றுக் கொள்ள முடியாத இந்த பெரும்பான்மை இனவெறித் தீர்வுத் திட்டத்தைச் சில தமிழ்க் கட்சிகள் ஆதரிக்கத்தான் செய்தன!

ஈ.பி.டி.பி. கட்சியும், புளொட் கட்சியும் நாடாளுமன்றத்தில் இதனை ஆதரித்த அதேவேளையில், தமிழர் விடுதலைக் கூட்டணி மௌனம் சாதித்தது.

சந்திரிகா அரசின் நீதி மற்றும் அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸுடன் காலஞ்சென்ற நீலன் திருச்செல்வம் எம்.பியும் இணைந்து தயாரித்த தீர்வுத் திட்டம் இது என்பதனாலோ அல்லது சந்திரிகா அம்மையாரின் மனதை நோக வைக்கக் கூடாது எனக் கூட்டணிக்கு இன்று தலைமை வகித்துக் கொண்டிருக்கும் அதன் செயலாளர் நாயகம் சம்பந்தன் காட்டிய தீவிரமான உறுதி காரணமாகவோ, இந்தத் தீர்வுத் திட்டம் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட போது, கூட்டணியின் ஐந்து எம்.பிக்களில் எவருமே வாய் திறக்கவில்லை.

இந்தத் தீர்வுத் திட்டத்தை தமிழ் இனத்தின் சார்பில் தனியொரு மனிதனாகத் துணிந்து நின்றவர் ரெலோ இயக்கத்தின் ஒரே ஒரு நாடாளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதன் மட்டுமே!

ஈ.பி.டி.பி. கட்சியும், புளொட் கட்சியும் சந்திரிகாவின் தீர்வுத் திட்டத்தை ஆதரிப்பதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

1994 ஆம் ஆண்டு ஆவணி மாதம் சந்திரிகா அரசு பதவிக்கு வந்த நாள் முதல் இந்த இரண்டு கட்சிகளும் அதனைத் தொடர்ந்து ஆதரித்து வருகின்றன.

தொடரும் போருக்குத் தேவையான பணத்தை ஒவ்வொரு வருடமும் வழங்கும் வரவு செலவுத் திட்டத்தையும், பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டையும் இந்த இரண்டு கட்சிகளும் தொடர்ந்து ஆதரித்து வந்துள்ளன.

அவசர காலச் சட்ட நீடிப்பினை ஒவ்வொரு மாதமும் நாடாளுமன்றத்தில் ஈ.பி.டி.பி. கட்சி ஆதரித்து வந்துள்ளது. இதைப் போலவே ஆதரித்து வந்த புளொட் கட்சி 1998 ஆம் ஆண்டு வைகாசி மாதத்தில் மட்டும் ஒரேஒரு தடைவையில் அவசர காலச்சட்ட நீடிப்பை எதிர்த்து வாக்களித்தது. ஆனால் சந்திரிகா அரசாங்கத்தின் மனம் நோவதை உணர்ந்து, எதிர்ப்பைக் கைவிட்டு, அடுத்த மாதம் முதல் வாக்கெடுப்பு நேரத்தில் நாடாளுமன்றத்தில் இருந்து மறைந்து விடுவதை அக்கட்சி வழக்கமாக்கி விட்டுள்ளது.

தொடரும் போரின் கீழ் நிகழ்ந்து வந்திருக்கும் அத்தனை அக்கிரமங்களுக்கும் அநீதிகளுக்கும், அநியாயங்களுக்கும், அடாவடித்தனங்களுக்கும் சட்ட ரீதியான பாதுகாப்பினை வழங்கி நிற்கும் அவசர காலச் சட்டத்தை எதிர்க்க முன்வராத எந்தவொரு தமிழ்க் கட்சிக்கும் தமிழ் மக்களின் ஆதரவைக் கோரும் தார்மீகத் தகுதி கிடையாது என்பதே எமது கருத்து!

ஒரு சில தமிழ்க் கட்சிகளின் ஒத்துழைப்புடன் ஆட்சி நடத்தி வந்திருக்கும் சந்திரிகா அரசு இளந் தமிழ் இனத்தின் விடுதலை எழுச்சியை ஒரு பயங்கரவாதப் போராட்டமாக சர்வதேச அரங்கில் சித்திரித்துக் காட்ட முழு மூச்சுடன் முயன்று வருகின்றது.

ஒரேயடியாகத் தமிழ் இனத்தை அடக்கி ஒடுக்கி, தீர்வுத் திட்டம் என்ற பெயரில் சில எலும்புத் துண்டுகளை வீசி எறிந்து, அவற்றை இரு கை நீட்டி ஏந்தத் தயாராக இருக்கும் சில தமிழ்க் கட்சிகளின் ஒத்துழைப்புடன் இனப்பிரச்சினையைப் போரின் மூலம் தீர்த்துக் கட்டிவிடலாம் என்று சந்திரிகா அரசு திட்டமிட்டு தீவிரமாகச் செயற்படுகின்றது. இந்த இனக் கொலைத் திட்டத்துக்கு ஆதரவாகச் சில வெளிநாடுகளின் உதவியையும் பெற்றுக் கொள்வதில், லக்ஷ்மன் கதிர்காமர் போன்ற தமிழினத் துரோகிகளின் பாரிய பங்களிப்புடன் அது வெற்றி கண்டிருக்கிறது.

இந்த இக்கட்டான நிலையில் தமிழ் மக்கள் ஆகிய நாம் என்ன செய்யப் போகின்றோம்?

2500 ஆண்டுகளுக்கு மேலாக, இந்த அழகிய இலங்கைத் தீவில் எமக்கென ஓர் அரசும் முடியும் கொடியும் கொண்டு அரசோச்சிய பெருமைக்குரிய வரலாற்றின் வாரிசுகள் நாம்.

இராவண மன்னர் காலம் முதல் அநுராதபுரத்தில் அரசோச்சிய எல்லாளன், இலங்கை முழுவதையும் தன் புலிக்கொடியின் கீழ் கொண்டுவந்த இராஜேந்திரசோழன், பின்னர் வீழ்ந்த தமிழினத்தை மீண்டும் எழ வைத்து வடக்கில் தனி இராச்சியம் அமைத்த சுந்தரபாண்டியன், அந்தத் தமிழ் இராச்சியத்தின் தலைவனாக போர்த்துக்கீச ஏகாதிபத்திய வாதிகளை எதிர்த்துப் போரிட்டு நல்லூர்க் களத்தில் தன் ஆருயிர் மகனுடன் உயிர் துறந்த மாவீரன் புவிராஜபண்டாரம், அவன் வழியில் யாழ்ப்பாணத் தமிழ் இராச்சியத்தின் கடைசி மன்னனாக போர் முனையில் சிறைப்பட்டு போர்த்துக் கீசரால் கோவாவுக்கு கைவிலங்குடன் நாடு கடத்தப்பட்டு அங்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட மாவீரன் சங்கிலிக்குமாரன் வரையில்... எமக்கெனத் தனி அரசுடனும் சுயமரியாதையுடனும் வாழ்ந்த வீர வரலாற்றின் வாரிசுகள் நாம்!

இலங்கைத் தீவில் வரலாற்று ரீதியாகவும், பூகோள ரீதியாகவும், கலாசார - பண்பாட்டு ரீதியாகவும் ஒரு தனித் தேசிய இனமாக, எமது சொந்தத் தாயகத்தில் நீண்ட நெடுங்காலமாக நாம் வாழ்ந்து வருகின்றோம்.

சுதந்திர இலங்கைத் தீவில், சுதந்திரமும், சமத்துவமும் எமக்கு மறுக்கப்பட்ட காரணத்தினால், அறவழியில் 1956 இல் வெடித்த எமது விடுதலை எழுச்சி, 1970 இல் வன்முறை வழியினை தியாகி சிவகுமாரன் நாடிய காலத்திலிருந்து மறவழிப் போராட்டமாக மெல்ல மெல்ல மாறி, 1983 இனக்கலவரத்தை தொடர்ந்து பேரெழுச்சி பெற்று புரட்சி வரலாறாக தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

**இந்த வரலாற்றின் சுவடுகளில் எத்தனையோ கிருஷாந்திகள்.....**
**ரஜனிகள்....கோணேஸ்வரிகள்.....சாராதாம்பாள்கள்......கமாலிற்றாக்கள்....**
**எத்தனையோ சஞ்சீவன்கள்.......சஞ்சயன்கள்......விஜயதர்சன்கள்......**

செம்மணிப் புதைகுழிகளும் கிளிநொச்சிப் புதைகுழிகளும்
மௌனமாகச் சொல்லும் கதைகள்
சுயமரியாதை கொண்ட அனைத்துத் தமிழ் நெஞ்சங்களிலும்
சோக உணர்வலைகளை உருவாக்கி விட்டிருக்கின்றன.

**மிதிபட்டு வதைபடும் எமது இனத்துக்கு நீதி வேண்டும்!**
**நிம்மதியான வாழ்வு வேண்டும்!!**

எமது மண்ணில் எமது விவகாரங்களை வேறெவரின் தலையீடும் இன்றி நாமே கவனித்துக் கொள்ளக்கூடிய விதத்தில் சுதந்திரமான அரசியல் ஏற்பாடு வேண்டும்.

**சுருக்கமாகச் சொல்வதானால்**
**நம்மை நாமே ஆளவேண்டும்.**

எமது நிகழ்காலத்தை சில துரோகிகள் விலைகூறி விற்றிருக்கலாம் ஆனாலும் நாம் மனந்தளரக் கூடாது.

**எமது நீண்ட வரலாற்றில் நாம் சில தடைவைகள் வீழ்ந்திருக்கின்றோம்.**
**ஆயினும் மீண்டும் எழுந்து நிற்க நாம் தவறியதில்லை.**
**நாம் மீண்டும் எழுவோம் - நிச்சயமாக! நிரந்தரமாக!**

நாடாளுமன்றத்தின் ஊடாக எமக்கு விடிவு வராது என்பது நாம் எல்லோரும் நன்கறிந்த விடயம். 1948இல் இருந்து அனுபவ ரீதியாக நாம் கற்ற பாடம்.

இருந்தாலும், சொந்த சுயநலங்களுக்காக இனத்தின் நலன்களை விலைபேசும் சுயநலமிகளும் பதவி வெறியர்களும் எமது இனத்தின் பிரதிநிதிகள் என்ற பெயரில் நாடாளுமன்றக் கதிரைகளுக்குப் பாரமாக உட்காந்திருப்பதையும், கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதராலயங்களுக்கும் மற்றும் சர்வதேச அமைப்புக்களுக்கும் இளந் தமிழினத்தின் தியாகம் செறிந்த விடுதலை எழுச்சியை 'பயங்கரவாத இயக்கம்' என கொச்சைப் படுத்தும் விதத்தில் கருத்துக்கள் தெரிவிப்பதையும், வெளிநாடுகளில் நடைபெறும் இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான மகாநாடுகளிலும் கருத்தரங்குகளிலும் இலங்கையின் இனவெறி அரசுக்கு ஆதரவாகப் பொய்ப் பிரசாரம் செய்வதையும் நாம் அனுமதிக்க முடியாது.

இன வெறி அரசின் தமிழ் ஏஜென்டுகளாக நியமிக்கப்பட்டிருக்கும் சுயநல - சந்தர்ப்பவாத பதவிவெறியர்கள், 'எமது இனத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்' என்ற லேபலுடனும் அந்தஸ்துடனும் அகில அரங்கில் எம் இனத்தின் கோடரிக் காம்புகளாக உலாவருவதை நாம் அனுமதிக்க முடியாது.

**இரவல் துப்பாக்கிகளுடன் ஜீவன அரசியல் நடத்தும்**
**துரோகத் தூசிகளை தூர விரட்டாத வரையில்**
**தமிழ் மண்ணின் அரசியல் சூழ்நிலை ஆரோக்கியம் பெறவே முடியாது.**

அது மாத்திரமன்றி, தமிழினத்தின் விடுதலை உணர்வுக்கு துணை நிற்கக்கூடிய துணிந்த தமிழர்கள் நாடாளுமன்றத்தில் இருந்தால் மட்டுமே இனவெறி அரசின் அடக்குமுறைச் சட்டங்களையும் சதி மதித்திட்டங்களையும் முழுமூச்சாக எதிர்க்கவும், அம்பலப்படுத்தவும் முடியும்.

இதற்கான அவசியம் இனத்தின் இன்றைய நிலையில் இருக்கவே செய்கின்றது.

**எம்மைப் பொறுத்த மட்டில், இனத்தின் சேவையில்**
**எம் உயிர்களை அர்ப்பணிக்கவும் தயாராகவே**
**உங்கள் முன் வந்துள்ளோம்.**

**ஆட்சியாளரின் அரவணைப்பும் அனுக்கிரகமும் பெற்று**
**அதிகார வலிமை கொண்டு நிற்கும்**
**சதிகார - சந்தர்ப்பவாத அரசியல் சக்திகளுக்கு எதிராக**
**நேர்மையுடனும் நெஞ்சுரத்துடனும்**
**நாம் துணிந்து களத்தில் நிற்கின்றோம்.**

**சுதந்திரத்தை நாடி நிற்கும் - சுயமரியாதை கொண்ட தமிழ் மக்களாகிய**
**உங்களின் ஆதரவை மட்டுமே நம்பிநிற்கின்றோம்.**

அவசரகாலச் சட்டத்தையும், தொடரும் போருக்கான நிதியை வழங்கும், பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு உட்பட வரவு செலவுத் திட்டத்தையும் தொடர்ந்து முழுமூச்சாக எதிர்த்து வந்திருப்பது மட்டுமன்றி, சந்திரிகா அரசின் அரைகுறைத் தீர்வுத் திட்டத்தையும் திட்டவட்டமாக நிராகரித்திருக்கும் ரெலோ இயக்கம் எமது அணிக்கு ஆதரவு அளித்து நிற்கின்றது.

## அன்புக்குரிய சகோதர சகோதரிகளே!

**இது ஒரு சத்திய யுத்தம்!**

**இந்த யுத்தத்தில் எம் இனத்தின் விடுதலை மாத்திரமே எமது குறிக்கோள்!**

**'எல்லாளன் சங்கிலியன் ஆண்ட தமிழீழம்**
**புல்லாளர் கையினின்றும் மீட்கப்பட வேண்டும்.'**

**இந்த இலட்சியத்தை முன்வைத்து உங்கள் முன்னிற்கும்**
**எமது அணிக்கு உங்கள் ஆதரவைத்தாருங்கள்.**

**போரை நிறுத்துங்கள்! புலிகளுடன் பேசுங்கள்!!**
**தமிழினத்தை தன்மானத்துடன் வாழ விடுங்கள்!!! -- இதுதான்,**

**சிங்கள பௌத்த அரசுக்கும்,**
**மற்றும் பேரினவாத சக்திகளுக்கும்**

**நாம் திட்டவட்டமாகத் தெரிவிக்கும் செய்தி.**
**உங்கள் சார்பில் இதனை உலகறிய உரத்துக் கூற**


**உங்கள் ஆதரவைத் தாருங்கள்.**
**கப்பல் எமது சின்னம்!**

**ஆம்! அன்று அலையலையாக வந்த**
**சோழர் படைகளைத் தாங்கி வந்த கப்பல்!**

**விடுதலை கோரி நின்ற வீரத் தமிழன் சிதம்பரப்பிள்ளை**
**வெள்ளை விதேசிகளுக்கு எதிராக ஓட்டிய கப்பல்.!**

**எம் இனத்தின் எழுச்சிச் சின்னமான கப்பலுக்கு நேரே புள்ளடியிட்டு**
**தமிழ் இனத்தின் தேசிய எழுச்சிக்கு வலு ஊட்டுங்கள் என்று**
**உங்கள் அனைவரையும் அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.**

(C/13270)

| சுயேச்சைக் குழு |  | X |
|---|---|---|

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றப் பொதுத்தேர்தல்
# 10-10-2000
# யாழ். மாவட்டம்



★ தமிழ் இனத்தை அழிக்கும் போர் தமிழ் மண்ணை ஆக்கிரமிக்கும் போர் - இக் கொடிய போரை உடன் நிறுத்த வேண்டும்.

★ சர்வதேசம் சொல்கிறது - தமிழ் மக்கள் கேட்கிறார்கள்:- 'தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டும்'

★ பௌத்த சிங்களப் பேரினவாதம் அரசியல் தீர்வை எதிர்க்கிறது; போர் முரசு கொட்டுகிறது.

★ போரை நிறுத்தவும், அரசியல் தீர்வை நிலை நாட்டவும் மூன்றாந்தரப்பு நாட்டின் உத்தரவாதம், பங்களிப்பு அவசியம்.

★ தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் நிரந்தர அரசியல் தீர்வுத்திட்டம் வேண்டும். அதுவே நாட்டுக்குச் சமாதானத் தீர்வாகும்.


- எம் தமிழ் மக்களின் உரிமைக்குரலை நாடாளுமன்றத்திலும் சர்வதேசத்திலும் வற்புறுத்துவோம்.
- மக்கள் இயக்கத்தைக் கட்டியெழுப்புவோம்.
- மக்கள் விடிவுக்காய் போராடுவோம்.
- மீண்டும் எம்மை அர்ப்பணிகின்றோம்.

★ அரசுடனும் ஐ.தே.கட்சியுடனும் கைகோர்த்து நிற்கும் அரசியல் வியாபாரக் கூட்டாளிகளை அப்புறப்படுத்துங்கள்.

★ உதயசூரியன் சின்னத்துக்கே வாக்களியுங்கள்!

## தமிழர் விடுதலைக்கூட்டணியை வெற்றி பெறச் செய்யுங்கள்!!

## தமிழர் விடுதலைக் கூட்டணி



X

(C/13272)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிமெந்து விலை மாற்றம்

டோக்கியோ சிமெந்து கம்பனியின் சிமெந்து விலை ஏற்றத்தினால் மிற்சுபி, அட்லஸ் சிமெந்துகளின் விலைகளும் உயர்ந்துள்ளன என்பதை எமது வாடிக்கையாளர் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

புதிய விலை:

அட்லஸ் பக்கற் ஒன்று 540 ரூபா (200 பக்கற்றுகளுக்கு)

மிற்சுபி பக்கற் ஒன்று 575 ரூபா (200 பக்கற்றுகளுக்கு)

**ஜெசிபா ஏஜென்சி**

132, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P: 2407

(C/1326)

## துப்பாக்கிச் சூட்டில் கான்ஸ்டபிள் பலி!

மட்டக்களப்பு,ஒக்.8

மட்டக்களப்பு மாவட்டம் - ஆறுமுகத்தான் குடியிருப்புப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியளவில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஏறாவூர் பொலீஸ் நிலையத்தில் கடமையாற்றும் அபுசாலி அப்துல் ரஸாக் என்பவரே சுட்டுக்கொல்லப் பட்டவராவார்.

ஓய்வு நேரங்களில் ஓட்டோ சாரதியாகக் கடமையாற்றும் மேற்படி நபர் ஓட்டோவில் சென்று கொண்டிருந்த சமயம் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-7-8-21)

## சர்வதேச சிறுவர் தினம்

- சிறுவர் உரிமைகள் சம்பந்தமான விழிப்புணர்வு -

★ சர்வதேச சிறுவர்தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட சிறுவர் உரிமைகள் கண்காணிப்புக்குழு சிறுவர் உரிமைகள் சம்பந்தமான சுவரொட்டிகளை பிரசுரிப்பதாக உத்தேசித்துள்ளது. இதற்கான ஆக்கங்கள் பாடசாலை மாணவர்களிடமிருந்தும், ஏனையோரிடத்திலிருந்தும் எதிர்பார்க்கப்படுகின்றன.

★ அத்துடன் காலாண்டு வெளியீடாக சிறுவர், சிறுமிகளது வெளிப்பாடுகளினை ஊக்குவிக்கும் பொருட்டு சிறுவர் நலன்சார் கட்டுரை, சிறுகதை, ஓவியம், காட்டூன், கருத்தோவியம், கவிதைகள் போன்றன எதிர்பார்க்கப்படுகின்றன.

★ மேற்படி ஆக்கங்கள் பின்வரும் கருப்பொருள்களினை மையமாகக்கொண்டு உருவாக்கப்படலாம்.

1.சிறுவர் உரிமைகள். 3.சிறுவர் துன்புறுத்தப்படல்

2.சிறுவர் துஷ்பிரயோகம். 4.சிறுவர் நலனில் சமுதாயத்தின் பங்கு.

★ ஆக்கங்கள் அனுப்பப்படவேண்டிய முகவரி:-

*து. வைத்திலிங்கம்,*
*தலைவர்,*
*சிறுவர் உரிமைகள் மாவட்ட கண்காணிப்புக் குழு,*
*மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.*

(C/13204)

## பொதுத் தேர்தல் 2000 - யாழ். மாவட்டம்

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் அதிபர், வடமாகாண அதிபர் சங்க முன்னாள் தலைவர் (79-88)

**கல்வியாளர் க.அருணாசலம் (இல.6)**

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகராக முன்வந்துள்ளார்.

உடனடியாக யுத்தத்தை நிறுத்தி மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தைகளைக் கோர,

தமிழரின் பாரம்பரிய நிலத்தைப் பேண,

தமிழர் உரிமையைப் பெற,

குமார் பொன்னம்பலத்தின் சேவையைத் தொடர

அவருக்கு வாக்களியுங்கள்.



மாமனிதர்

| | | |
|---|---|---|
| அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் | | X |
| க.அருணாசலம் | இல. | 6 |



க.அருணாசலம்

(78946)

# வேண்டாம் வன்முறை

தேர்தல் வன்முறையைக் கண்காணிப்பதற்கான நிலையம் (கே.வ.க.நி)

**ஜனநாயகத்தை காக்க வன்முறைக்கெதிராக வாக்களியுங்கள்**

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 01 - 06 - 1935

மறைவு 20 - 09 - 1999

அமரர்

**கதிர்காமர் பாலசுப்பிரமணியம்**

**(இரத்தினம்)**

(ஓய்வுபெற்ற உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி)

**திதி: 08-10-2000**

அன்பின் இருப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய் குடும்பத்தின் தலைவனாய்
இருந்து எம் உயர்வுக்காய் உழைத்து நல்வாழ்வு
வாழ வழிகாட்டிய எம் அன்புத் தெய்வமே!
நீங்கள் ஒடி மறைந்தீர் ஓராண்டு
எங்கள் மனதில் வீற்றிருப்பீர் பல்லாண்டு!

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளை, சகோதரன்.

*79, சிவன்கோயில் வீதி,*
*திருநெல்வேலி.*

(79133)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 09 - 01 - 1934

மறைவு 12 - 10 - 1997

அமரர் **P.K.பாலசிங்கம்** (படியாதவன்)

(இளைப்பாறிய முதன்மை ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர் (விஞ்ஞானம்)பாடவிதான அபிவிருத்தி நிலையம், கொழும்பு, கல்வி அமைச்சின் விஞ்ஞான பாடநூல் எழுத்தாளர்)

**விஞ்ஞானமென்பது வெறும் வார்த்தை விளக்கமல்ல**
**கண்டறிய வேண்டிய கற்கைநெறியென்று**
**அடித்துச் சொன்னவர் நீங்கள் அப்பா!**

மனைவி, மக்கள், மருமகள்,
பேரப்பிள்ளைகள், சகோதர
சகோதரிகள், மருமக்கள்.

*P.K.B.பாலஸங்கர்,*
*'விதானை சங்கரியா வளவு'*
*718, கே.கே.எஸ். வீதி,*
*சிவலிங்கப்புளியடி,*
*யாழ்ப்பாணம்.*

(C/13248)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள சிங்கர் தையல் மெசின், சாப்பாட்டு மேசை, கதிரைகள், மேசை வேறும் சில. தொடர்பு:-112, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம். (79266)

எயர் கொம்பிரசர், எயர் றிங்ஸ், 3டொன் ஜெக் விற்பனைக்குண்டு. தொடர்பு:த.அரியரட்ணம், "தர்மவாசா" லோட்டன் றோட், மானிப்பாய். (79269)

**Super Cup**-50 (லான்சா மொடல்) மோட்டார் சைக்கிள் (பெண்கள் ஓடுவதற்கு தகுதியானது) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: **T.**குணபாக்கியம் (சங்கீத ஆசிரியை), தொல்புரம் கிழக்கு, சுழிபுரம். (79066)

மிகவும் நல்ல நிலையில் உள்ள குளிர்சாதனப் பெட்டியும் (**West Point**), தையல் இயந்திரமும் (**Singer**), உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 442, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (79185)

பாவிப்பிலுள்ள புதிய **CHARLY** மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: **V.**சிவலிங்கம், 190/2, கஸ்தூரியார் வீதி (கணேசா நகையகம் அருகில்), யாழ்ப்பாணம். (79276)

நல்ல நிலையிலுள்ள **Pionner box, Pionner Cassette Player, NEC Ampliwire, NEC Cassette Player,NEC tunner (Japan)** விற்பனைக்குண்டு. தொடர்பு: **S.**அமலன், 18/2, கோயில ஒழுங்கை, நாவாந்துறை, யாழ்ப்பாணம். (79168)

## மலிவு விற்பனை

கராட்டி ஜுடோ வர்மக்கலை, மனோவசியக்கலை,வயலின், யோகாசனம், சோதிட மருத்துவம், றேடியோ, எலக்ரோனிக்ஸ், சிங்களம், ஆங்கிலம் இலகுவில் கற்கக்கூடிய பற்பல வகையான புதிய புத்தகங்களும் ரியூட்டறி வாங்கு மேசைகளும் மிக மலிவாக விற்கப்படும். தொடர்பு: பரம் ஜோதி, 124/2, ராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். (79281)

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி (**Broilers**) விற்பனைக்குண்டு. சுத்தம்செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- இல.15, 6ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் (சின்னக்கடைக்கு அருகில்). (79268)

இறைச்சிக்கோழி (புறொயிலர்) தேவையான அளவுகளில் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். (1) 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம், (கண்ணா வீடியோ சென்ரர் வளவு). (2) பொன்னாலை வீதி, மானிப்பாய் (விதானை வளவு). (79194)

## சோதிடர்

மட்டுவில் சோதிடர் அச்சுவேலி ஆஸ்பத்திரி மணியம் வீட்டில் சோதிடம் பார்த்தவர் தற்போது **S.** ஐயக்கோன் (ஸ்ரீதர் தியேட்டர் பின் பக்கம் 3ஆம்வீடு), **18/3**,கலைப்புலவர் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் வாடிக்கையாளர்கள் வந்து சந்திக்கலாம். (79179)

## வீடு வாடகைக்கு

சங்கானை மேற்கில நாற்சார்வீடு (பெரியது) வாடகைக்குக் கொடுக்கப்படும். தொடர்பு: த.இராமநாதன் (ஆசிரியர்), பூம்பற்றை வீதி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு. (79177)

## நாடகமும் அரங்கியலும்

பகுதி Iக்கான பிரிவுIஇன் வினா விடைகள்(200)அடங்கியதாக வெளி வந்துவிட்டது. ஆசிரியர்:**M.M.**மயூரதாஸன். சகல இடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம். (79191)

## தவறிவிட்டது

புதிய செம்மணி வீதி, கல்வியங்காடு எனும் முகவரியுடைய கருணாநிதி ருக்மணி என்பவருடைய விசேட அ.அட்டை கல்வியங்காட்டுக்கும் செனபற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நீர்வேலி பழம் சந்தியிலுள்ள விநாயகர் ஸ்ரோர்ஸில் ஒப்படைக்கவும். (79195)

தங்கராசா சிவசுஸ்வரி என்பவருடைய இடைக்காடு, அச்சுவேலி என்னும் முகவரியிடப்பட்ட விசேட அ.அட்டை (இல.0903005403), தேசிய அடையாள அட்டை (இல.6267210 60v), அலுவலக அ.அஎன்பன பேஸ் உடன யாழ்.பஸ்நிலையத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன யாழ். கிளையில் அல்லது அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (79273)

## DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமையக் கட்டிக் கொடுக்கப்படும். (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூபா 350/-). தொடர்பு: பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 3081. (**C**/13122)

## இறைச்சிக்கோழி

**Broiler** இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும பெற்றுக் கொள்ளலாம். இன்று விசேட சேவை. 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (79252)

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா - ஐயாத்துரை

(முன்னாள் செம்பியன்பற்று கிராமசபை உறுப்பினர் )

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்றைப் பிறப்பிடமாகக்கொண்ட செல்லையா ஐயாத்துரை கடந்த 03-10-2000 அன்று செம்பியன் பற்றில காலமானார். இவர் காலஞ் சென்ற சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும் நாகேஸ்வரி, சிறிரங்கராசா (வவுனியா), சிறிரங்கதுரை(கனடா), சிறிரங்கதாஸ்(கொழும்பு), சிறிரங்கநாதன், சிறிரங்கேஸ்வரன் (தலைவர் பி.தே.சபை, பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04-10-2000 அன்று நடைபெற்றன. இந்தத்தகவலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்

ஐ.சிறிரங்கேஸ்வரன்

(மகன்)

*கந்தமுருகேசனார்*
*சிலையடி,*
*மந்திகை, புலோலி.* (C/13284)

## சின்னத்தம்பி இராஜதுரை

துன்னாலை கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜதுரை 04-10-2000 அன்று கொழும்பில் காலமானார். அன்னார் சின்னத்தம்பி - நல்லம்மா ஆகியோரின் அன்புமகனும், கல்விநாயகியின் அன்புக்கணவரும், விவேகானந்தன், பாலசுந்தரம்,மலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சியாதரன் (ஆஸ்திரேலியா), சியாதனி (நோர்வே), தீபன்(கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நாகராசா (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற கனகலட்சுமி, விக்கினராசா (முகாமையாளர், இலங்கை வங்கி, சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், உதயராஜசிங்கத்தின் அன்பு மாமனாரும் விதூஷனின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08-10-2000) கொழும்பில் நடைபெறும். அவரின் அனுதாப நிகழ்வு மல்லாகம், நீதிமன்ற வீதியில் உள்ள அழகராசாவின் இல்லத்தில் இன்று (08-10-2000) நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்

அ.அழகராசா

*நீதிமன்ற வீதி,*
*மல்லாகம்.* (79285)

## இலங்கை வங்கி சாவகச்சேரிக் கிளை யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம்,ஒக்.8

இலங்கை வங்கியின் சாவகச்சேரிக்கிளையிலிருந்து ஆவணங்கள் மீட்கப்பட்டதையடுத்து மேற்படி கிளையின் வழமையான வங்கிச் சேவைகள், ஆஸ்பத்திரி வீதியில் உள்ள இலங்கை வங்கி பிரதேசக் காரியாலயக் கட்டடத்தில் நாளை திங்கட்கிழமை முதல் மறுஅறிவித்தல் வரை காலை 9.30 மணி முதல் நண்பகல் 12 மணி வரை நடைபெறும் என்றும்-

வடமராட்சிப் பகுதியில் இடம் பெயர்ந்து வாழும் வாடிக்கையாளர்களின் நன்மை கருதி பருத்தித்துறை இலங்கைவங்கிக்கு அருகில் வாரந்தோறும் செவ்வாய் மற்றும் வியாழன் ஆகிய இரு நாள்களும் வங்கியின் விசேட கருமபீடம் இயங்கும் என்றும் - இலங்கை வங்கியின் பிரதேச முகாமையாளர் கே.பாலசுப்பிரமணியன் தெரிவித்துள்ளார். (இ-ஒ)

## ச.தொ.ச. திருட்டு; இருவருக்கு பிணை

யாழ்ப்பாணம்.ஒக்.8

யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் (ச.தொ.ச.) இடம்பெற்ற திருட்டுத் தொடர்பாக கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இருவர் யாழ்.நீதிமன்றினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த மே 15ஆம் திகதி மேற்படி சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த நி.மயூரதன் (திருநெல்வேலி), அ.தயாபரன் (யாழ்ப்பாணம்) ஆகிய இருவரும் யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரையும் தலா 50 ஆயிரம் ரூபா ஆள்பிணையில்செல்ல அனுமதித்த நீதிவான் ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 8.30 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் யாழ்.பொலீஸ் நிலையம் சென்று அறிக்கை செய்யுமாறும் உத்தரவிட்டார். (இ-5-ரி)

## தென்மராட்சிப் பகுதிக்கான உதவிப் பணம்

யாழ்ப்பாணம்,ஒக்.8

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கான இரண்டாவது பட்டியலுக்குரிய பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவுகள் நாளை திங்கட்கிழமை தொடக்கம் வழங்கப்படவுள்ளன.

பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவுகளைப் பெறுவோர் தமது ஜுலை, ஓகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதங்களுக்கான கொடுப்பனவுகளை திருநெல்வேலி, சண்டிலிப்பாய்,நல்லூர், ஆனைக்கோட்டை ஆகிய உப தபால் நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்று யாழ். தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-10)

## சிங்களத்தில் சுவரொட்டி

உரும்பிராய்,ஒக்.8

உரும்பிராய் சுன்னாகம் பகுதிகளில் சிங்கள மொழியிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

தென்னிலங்கைக் கட்சியான சிஹல உறுமயவின் இந்தச் சுவரொட்டிகள் தொலைபேசிக் கம்பங்களில் ஒட்டப்பட்டுள்ளன. (இ-154)


**ராஜா**
(யாழ்ப்பாணம்)

**விஜய், ஜோதிகா**
மற்றும் பலரின் நடிப்பில்

**குஷி**

காட்சிகள்: 10.30,2.00 (பு.நே) (C/13207)

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)

பிரசாந்த், ரம்பா,
லிவிங்ஸ்டன்,
ராதாரவி நடித்த

**பூமகள் ஊர்வலம்**
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00,2.30 (பு.நே.) (79...)


## நலம் தரும் நடவடிக்கைகள்

உலக உளநல நாள் ஒக். 10

### 8. ஆறுதலாய் இருத்தல்



நாம் சிறிது நேரமாயினும் ஆறுதலாய் இருப்பது அவசியம். அதற்கென நேரத்தை ஒதுக்கிக் கொள்வோம்.
இந்த ஆறுதலான வேளையில் என்ன செய்யலாம். என நினைக்கிறீர்கள்?

-வாசிக்கலாம், இசைகேட்டு மகிழலாம், இயற்கையை ரசிக்கலாம், மனதை நடு நிலைப்படுத்தலாம், சும்மாயிருக்கலாம்....


**ஒளியருவி**
**வீடியோ & போட்டோ**

யாழ்.பல்கலைக்கழக 19ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற பட்டதாரிகளே!

உங்களின் பட்டமளிப்பு விழா உள்ளக வெளியகக் காட்சிகளை என்றும் பசுமையாகப் பார்த்து மகிழ்ந்திட ஏற்ற வகையில் தனித்தனிப் பிரதியாக மிகக் குறைந்த கட்டணத்தில் வழங்கவுள்ளோம். எமது நிறுவனத்தில் பதிவுகளை மேற்கொள்வதன்மூலம் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம். இவ்வாண்டு பட்டமளிப்புவிழா உள்ளக வெளியக படப்பிடிப்பு இரண்டையும் மேற்கொண்ட நிறுவனம்

**எமது ஒளியருவி நிறுவனமே!**

பட்டமளிப்புவிழா ஒளிநாடாக்களை (VDOகசற்) கொழும்புக்கு அனுப்புவதற்கான ஒழுங்குகள் செய்து தரப்படும்.

தொடர்புகள்:-
T.P 021-2604 or 070-212720 (79283)

**15/4, முருகேசர்லேன், நல்லூர்.**


## 5 ஆம் நாள் நினைவஞ்சலி



### அந்தோனிப்பிள்ளை றோசம்மா
(றோஸ்மணி)

அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு எமக்கு ஆறுதல் தெரிவித்த குருக்கள், கன்னியர்கள் மற்றும் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கின்றோம். 09-10-2000 திங்கட்கிழமை நடைபெறவுள்ள 5ஆம்நாள் நிகழ்விலும் மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


தகவல்:

**கணவன், பிள்ளைகள், சகோதரங்கள்.**

*நாலாம் கட்டை,*
*ஆனைக்கோட்டை.* (79284)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 23 - 11 - 1926 | 08 - 09 - 2000 |



அமரர்

### முத்துத்தம்பி தில்லையம்பலம்
(கணேசபுரம், கிளிநொச்சி)

அன்பாலும் பண்பாலும் அரவணைத்த ஐயா!
உங்கள் பிரிவால் என்றும் வாடுகின்றோம் ஐயா!
ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்டீர்களோ?
எம்மைத் தவிக்க விட்டுச் சென்றீரோ இறைவனிடம்

ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

**க.இராமச்சந்திரன்**
*கொக்குவில் கிழக்கு,*
*சம்பியன் லேன்,*
*கொக்குவில.* (79261)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றத் தேர்தல் 2000 - யாழ்ப்பாண மாவட்டம்



இல 1 அந்தோனிப்பிள்ளை வின்சன் கெனடி
பருத்தித்துறை ந. ச. தலைவர்



இல 3 கதிரவேற்பிள்ளை சுதாகரன்
(ஈரோஸ் சுதா மாஸ்டர்)



இல 5 தர்மலிங்கம் சித்தார்த்தன்



இல 8 சட்டத்தரணி சிவசங்கரம் பாலேந்திரன்
(சிவா பாலேந்திரன்)



இல 2 அன்ரன் பொன்னையா
சாவகச்சேரி பி. ச. தலைவர்

இன்று
இவர்கள் உங்கள் வேட்பாளர்கள்.

நாளை
இவர்கள் உங்கள் பிரதிநிதிகள்.

ஆனால், என்றும்
இவர்கள் உங்கள் சேவையாளர்கள்.

வடக்கு - கிழக்கு தாயகத்தில் சுயாட்சி அதிகாரத்துடன் தமிழர் வாழப் போராடும் தோழர்கள்.

நாடோடி வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி வைத்து சொந்த மனைகளில் குடியேறவும், அகதி வாழ்க்கையைத் துடைத் தெறிந்து எம் மக்களுக்கு நிரந்தர குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திடவும் உழைக்கும் சகோதரர்கள் இவர்கள்.

அன்றாடப் பிரச்சினைகளில் தோள் கொடுத்து உங்கள் மத்தியிலிருந்து சேவையாற்றுகின்ற தொண்டர்கள் இவர்கள்.

தேர்தல் வரும், போகும். ஆனால் என்றும் உங்கள் இன்ப துன்பங்களில் பங்குகொள்பவர்கள்.



இல 9 செபஸ்ரியான் இருதயராஜன்
(வோல்டர் ராஜன்)



இல 4 கந்தசாமி தயாபரன்
(யாதவன்)



இல 10 செல்வதுரை ஜெகநாதன்



இல 6 பெனடிக்ற் தனபாலசிங்கம்
சாவகச்சேரி ந. ச. தலைவர்



இல 11 இராஜேந்திரம் செல்வராசா
(நீர்வேலி செல்வம்)

உங்களது
இனிய நண்பர்கள்
அர்ப்பணிப்பு மிக்க சேவையாளர்கள்
என்றும் இவர்கள்
உங்கள் வீட்டுப் பிள்ளைகள்



இல 7 சபாபதிப்பிள்ளை ஜெயச்சந்திரன்
(ஜெயா மாஸ்டர்)
(யாழ். மாநகரசபை உறுப்பினர்)

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி
(புளொட் + ஈரோஸ்)

X



இல 12 வேலு நவரத்தினம்
கொடிகாமம் ஐயாவின் மகன்
(நவம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றத் தேர்தல்

## 10-10-2000

## யாழ்ப்பாண மாவட்டம்



அ. வரதராஜப்பெருமாள்

இல. 8



த. சுபத்திரன்
(றொபேட்)

இல. 3

**இனிய யாழ். வாழ் தமிழ் மக்களே!**


10ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில் மீன் சின்னத்துக்கு நேரே புள்ளடியிட்டு எங்கள் வேட்பாளர்களை உங்கள் பிரதிநிதிகளாக நாடாளுமன்றத்துக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்கின்றோம். நாங்கள் உங்கள் தேவைகளை நிறைவேற்ற உண்மையாகவும் நேர்மையாகவும் வெளிப்படையாகவும் உழைப்போம்.

★ அரசியல் தீர்வை உருவாக்கி அமைதியை ஏற்படுத்தி அபிவிருத்திக்கு வழி வகுப்போம்.
★ அழிவைத் தரும் யுத்தத்தையும் அகதி வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டு வரவும் ஆன அனைத்தையும் முயற்சிப்போம்.
★ எமது பகுதியில் கல்வி செழித்திடவும் பொருள்வளம் குவிந்திடவும் வகை செய்வோம்.
★ வடக்கு-கிழக்கு மாகாண அரசை மீண்டும் புதிய மூச்சுடன் செயற்படச் செய்வோம்.
★ தொழிற்சாலைகள், கல்விச்சாலைகள், ஆலயங்கள் உட்பட அழிந்து கிடக்கும் அனைத்தையும் புனரமைப்போம்.
★ வேலை வாய்ப்புக்களும், தொழில் விருத்திகளும் பெருகிட வகை செய்வோம்.
★ இலங்கையின் ஏனைய பாகங்களுடனான போக்குவரத்துக்களை இலகுபடுத்துவோம்.
★ தமிழ்ப் பேசும் மக்களும் சிங்கள மக்களுடன் எல்லா வகையிலும் சரிநிகர் சமானமாக, சமாதானமாக வாழ வழிசெய்வோம்.

*மீன் சின்னத்துக்கு வாக்களித்து எமக்கு உங்கள் பலத்தைத் தாருங்கள்;*
*நாங்கள் பல மடங்கு சக்தியுடன் உங்களுக்குச் சேவையாற்றுவோம்!*

உரிமைக்குக் குரல் கொடுப்போம்.
உறவுக்குக் கை கொடுப்போம்.
உள்ளதைச் சொல்வோம் முடிந்ததைச் செய்வோம்.
உண்மையாக உழைப்போம் நேர்மையாக நடப்போம்.

*குறிப்பு:-* வானம்பாடி ஒலிபரப்புச் சேவையில் இரவு 8 மணிக்கு வரதராஜப்பெருமாள் அவர்களின் உரையை நீங்கள் கேட்கலாம்.

| | | |
|---|---|---|
| **சுயேச்சைக்குழு - 2** |  | **X** |

(79235)

**ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்.)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு யுத்தத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
திருக்கலாம் என்ற கூற்றை கடற்படை உயரதிகாரி ஒருவர் அடியோடு நிராகரித்தார். அதற்கு ஆதாரங்கள் ஏதும் இல்லை என்றார் அவர்.

"கடற்புலிகளின் நடவடிக்கைகளை நாம் உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றோம். இரவு, பகலாக எமது கண்காணிப்பு ரோந்துப் பணி தொடர்கின்றது. அண்மைக் காலத்தில் கடல்வழியாக ஆயுதங்களைக் கொண்டு வந்து சேர்க்கும் நகர்வு எதிலும் கடற்புலிகள் ஈடுபட்டதாக இல்லை. அண்மைக் காலத்தில் புலிகள் கனரக ஆயுதங்களைச் சுவீகரித்திருக்கலாம் - ஆனால் நிச்சயமாகக் கடல்வழிப் பாதை ஊடாக அல்ல" - என்றார் அந்தக் கடற்படை உயரதிகாரி.

விமானப்படை விமானங்களை நோக்கி விமான எதிர்ப்பு ஏவுகணைகளை ஏவும் புலிகளின் தாக்குதல்களும் கடந்த செப்ரெம்பர் மாதத்தில் பெருமளவு அதிகரித்திருப்பதாக விமானப்படை உயரதிகாரிகள் கூறுகின்றனர்.





08-10-2000 இதழ் விற்பனையாகின்றது.
விலை:
ரூபா 15.00 மட்டும்
வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

பாரதி பதிப்பகம்
430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:-3081

(C/13285)


## உயிரிழந்த.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தேவி - நெடுங்கேணி)

* சுகதா (கருப்பையா ராணி- திருகோணமலை)

* அறிவரசி (மாணிக்கம் யோகராணி - முல்லைத்தீவு)

* யாழ்மதி(அருளப்பு வசந்தகுமாரி - வவுனியா)

* மதனா(ஆறுமுகம் தனலஷ்மி - மட்டக்களப்பு)

* தனிநிலா (இரத்தினம் திலகவதி - யாழ்ப்பாணம்)

* இளையதர்சினி (மாணிக்கம் பவானி - யாழ்ப்பாணம்)

* அருளரசி (உதயகுமார் தவமணிதேவி - கண்டி)

* திருமாறன் (பாக்கியநாதன் - ரஜிகரன் - யாழ்ப்பாணம்)

* கப்டன் அறிவொளி (தேவசகாயம் கமலதாஸ் - வவுனியா)

* எழிலரசி (துங்கவேல் ஜெயஶ்ரீ - கண்டி)

* சாந்தகுமாரி (சூசையப்பு மொறாயிஸ் ரமணி - மன்னார்.)

* வேனினி (முருகையா சதானந்த லஷ்மி - வவுனியா)

* கலைச்சுடர் (நல்லதம்பி விஜயசுந்தரம் - மன்னார்)

* இலக்கணா( ஜீவரட்ணம் பாலசுலோஜினி - ஒட்டுசுட்டான்)

* தேன்விழி (இரத்தினம் ஜேனித்தா - ஒட்டுசுட்டான்)

* அகல்யா (ராகேஸ்வரன் கலையரசி - பூநகரி)

* குட்டிவேங்கை (சகாயநாதன் சுரேஸ் - கொழும்பு)

* லெப்டினன்ட் நிலமகள் (கந்தையா சிவரஞ்சினி - யாழ்ப்பாணம்)

* 2ஆம் லெப்ரினன்ட் ஈழமதி (துரைராசா தாட்சாயிணி - யாழ்ப்பாணம்)

* சிறப்பு எல்லைப்படை வீரர் சோதி (கந்தசாமி சோதிநாதன் - கிளிநொச்சி) (ஐ-8-164)


# எனக்கு ஏன் வாக்களிக்க வேண்டும்?



★ சந்திரிகாவின் சாபக்கேடான - கொடூர - ஆட்சியை எதிர்க்க வேண்டுமானால்....

★ அவசரகாலச் சட்டம் உட்பட தமிழ் மக்களுக்கு எதிரான எந்தத் துரோகமான நடவடிக்கைக்கும் துணைபோகாமல் நிற்க....

★ சொந்த இடங்களில் இருந்து வெளியேறி அகதி முகாம்களிலும் மற்றும் பல்வேறு இடங்களிலும் தங்கியிருக்கும் (தென்மராட்சி உட்பட அனைத்துப் பிரதேச) மக்களும் ஒரு மாத காலத்துக்குள் தங்கள் சொந்த இடங்களில் மீளக் குடியமர.....

என்னை ஆதரியுங்கள்!

## தியாகராஜா மகேஸ்வரன்

முதன்மை வேட்பாளர்

| | | | |
|---|---|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி |  | X | 4 |

(C/13292)



அன்பிற்கினிய மக்களே!

உங்கள் ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கிட.....

ஈ.பி.டி.பி. இதுவரை காலமும் ஆற்றிய பணிகளை நினைவு கூருங்கள்! இனியும் தொடர்ந்து பணியாற்ற, உங்கள் துயர் துடைத்திட ஆதரவு தாருங்கள்!

- இதுவரை காலமும் தொடரும் குரூர யுத்தத்தை நிறுத்தி கௌரவமான தீர்வை தமிழ் பேசும் மக்கள் பெற்றிட....
- சிங்களப் பேரினவாதத்தால் நசியுண்டு போன எம் இனிய தமிழ் மொழிக்கு சிங்கள மொழிக்கு நிகரான அந்தஸ்தைப் பெற்றிட....
- தொடரும் யுத்தத்தினால் சீரழிந்த உங்கள் கல்வித் தரத்தை மீளவும் உயர் நிலைக்கு உயர்த்தி கல்விச் சமுகமாக எம் தமிழ் பேசும் இனத்தையே மாற்றிட......
- எம் தேச இளைஞர், யுவதிகளுக்கு, வேலைவாய்ப்பற்ற நிலையை இல்லாமல் செய்திட.....
- விவசாயம், கடற்றொழில் மற்றும் ஏனைய தொழிற்றுறைகளில் உள்ள தடைகளை அகற்றி அதில் ஈடுபடுவோர் உரிய வருமானம் பெற்று தலை நிமிர்ந்து வாழ்ந்திட.....
- எங்கள் தேசங்களிலுள்ள அரச நிறுவனங்களில் வினைத்திறனான இயக்கத்திற்கு.
- சுகாதாரம், மின்சாரம், போக்குவரத்து, தொலைத்தொடர்பு என அனைத்து வசதிகளையும் யுத்தம் சீரழித்த எங்கள் நிலத்தில் மீண்டும் திறம்படக் கட்டியெழுப்பிட.....
- இடப்பெயர்வுகளின்போது தமிழ் பேசும் மக்கள் அகதிகளாக அநாதைகளாக கைவிடப்படும் நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்திட......
- உங்களது சொந்த மண்ணில் மீளவும் அச்சமற்று நிம்மதியாக மீளக்குடியமர்ந்திட....
- குழந்தைகள், பெண்கள், முதியோர்கள் நலன்களில் கூடிய அக்கறை செலுத்தி அவர்களுக்கு சமுகப் பாதுகாப்பை உருவாக்கிட....
- யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விடிவு கிடைத்திட.....

## ஈ.பி.டி.பியை ஆதரியுங்கள்!

| | | |
|---|---|---|
|  | X | வீணைச் சின்னத்திற்கு வாக்களித்திடுங்கள்! |

(78937)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.10.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# உதயன்

## புதுவழி நடத்தல்

நீதி அரசமைப்பு, தேசிய நல்லிணக்க அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அண்மையில் வெளியிட்ட தகவல் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய ஒன்று. பொதுத் தேர்தல் ஒன்று நடைபெறும் இவ்வேளையில் அவர் தமது இதயத்திலிருந்து கூறியதைத் தமிழர்கள் தவறாது மனங்கொள்ள வேண்டும்.

சிறுபான்மை இனத்தவர்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதற்கான அரசியல் நடவடிக்கைகளில் நான் தொடர்ந்து ஈடுபட்டு வந்த காரணத்தால், சிங்கள மக்களில் பெரும்பாலானவர்கள் என்னைத் தங்களுக்குப் பயனில்லாதவன் என்று நினைக்கிறார்கள் — என்று அவர் கூறியிருக்கிறார்.

சந்திரிகா அரசாங்கம் முன்வைத்த அதிகாரப் பரவல் திட்டத்தின் பிதா மகர் எனக் கருதப்படக்கூடியவர் அமைச்சர் பீரிஸ்.

அதனைத் தயாரிப்பதற்கு முன்னர் சிங்கள மக்களின் மனப்பாங்கில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியிருந்தது. அதற்காக சிங்களச் சமூகத்தின் பலமட்டங்களையும் நேரடியாகச் சந்தித்து உரையாடும் தேவை இருந்தது — எனவும் அவர் சொல்லியுள்ளார்.

தமிழர்களுக்குச் சேரவேண்டிய உரிமைகளை வழங்க வேண்டும் என்ற மனவிருப்பம், நியாயத்தன்மை சிங்கள மக்களிடம் மிகக் குறைவே என்பதனை அது எடுத்துக் காட்டுகிறது. அதற்கான மனமாற்றம் உண்டாவதை தெற்கின் பேரினவாதிகள் தடுத்து விடுகிறார்கள் என்பதே உண்மை.

தமிழர்களின் உரிமைகள் வழங்கப்பட்டாலேயே நாட்டுக்கு நல்ல எதிர்காலம் உண்டு என்ற உண்மையைப் புரிந்து கொண்ட பேராசிரியர் பீரிஸ் போன்ற ஒரு சிறுகூட்டத்தினர் இருந்தாலும் பேரினவாதிகளை மீறிக் கொண்டு, விஞ்சிக்கொண்டு அவர்களால் எதுவும் செய்ய முடிவதில்லை!

இந்த நிலையை உண்டாக்கியவர்கள் தென்னிலங்கையின் முந்திய சந்ததித் தலைவர்கள். ஆனால் நாடு நெருக்கடி மிகுந்த இன்றைய கட்டத்துக்கு வந்த பின்னரும் கூட, இன்றைய தலைவர்களும் அதனைக் கைவிடுவதாக இல்லை.

தென்னிலங்கையில் நேற்றுடன் நடைபெற்று முடிவுக்கு வந்த தேர்தல் பிரசாரத்தின் போக்கை அவதானித்தால் —

தமிழர் பிரச்சினையை முன்னிறுத்தி வாக்குப் பலத்தை அதிகரிக்கும் அரசியலை அவர்கள் கைவிடத் தயாரில்லை — என்பது தெளிவாகியுள்ளது.

தமிழர்களை அழித்து விடுவதாயினும் பரவாயில்லை, தமக்குத் தேவையான அதிகாரமும் பதவிகளும் கிடைத்துவிட்டால் போதும் என்ற ''கோட்பாடு'' தென்னிலங்கை அரசியலில் ஆழமாக வேரூன்றிவிட்டது. அதனைப் பிடுங்கி எறிவது இயலாத காரியம்; தெற்கின் அரசியல் தலைவர்கள் அதற்கு இசையவும் மாட்டார்கள்.

ஆகையால் தமக்குரிய உரிமைகளை சிங்களத் தலைவர்களிடம் இருந்து பெற முடியும் என்ற நம்பிக்கையுடன் தமிழ் மக்கள் சந்ததி சந்ததியாகத் தொடர்ந்து ஏமாந்து கொண்டிருக்கும் பரிதாப நிலை நீடிக்கத்தான் வேண்டுமா?

இது குறித்து தமிழர்கள் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். தூர நோக்குடன் சிந்தித்துச் செயற்பட்டு புதுவழி நடக்க முனையவேண்டும். முற்படுவார்களா?

# காங்கிரஸ் நிலைப்பாடு: குமாரின் மகன்விளக்கம்!

கொழும்பு, ஒக். 8

தமிழ்மக்களின் அபிலாஷைகளுக்காக துணிவோடு அபிலாஷைகளில் எந்த விட்டுக்கொடுப்புக்கும் தயாரில்லாது உரிமைக்குரல் எழுப்பும் தமிழ் அரசியல் ஸ்தாபனங்கள் இரண்டு மட்டுமே உண்டு. அவற்றுள் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் மட்டுமே எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்றது.

தமிழ்க்காங்கிரஸ் முன்னாள் தலைவர் அமரர் குமார் பொன்னம்பலத்தின் குடும்பம் சார்பாக அவரது மகன் கஜேந்திரகுமார் ஜி. பொன்னம்பலம் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எதிர்வரும் தேர்தல் தொடர்பாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பாக அமரர் குமார் பொன்னம்பலம் அவர்களது குடும்பத்தின் நிலை பற்றியதான சில வதந்திகள் எமது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதால் நாங்கள் இப் பதிவுகளை செம்மை செய்ய வேண்டிய நிலை எழுந்துள்ளது.

இன்று தமிழ் தேசியம் வாழ்வா? சாவா? எனப் போராடிக் கொண்டிருக்கின்றது. தமிழ் தேசியத்தினுடைய வியாபகமும் இருப்பும் தமிழ் மக்கள் எதிர்வரும் ஒக்ரோபர் பத்தாம் திகதி எடுக்கப்போகும் சரியான செம்மையான தெரிவில்தான் தங்கியுள்ளது.

அடுத்தடுத்து வந்த அரசுகள் எமது தேசிய பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே என்னும் பாவனையில் இனக் கொலைக்கு காரணமாக அமைந்தமைக்குக் காரணம் நாடாளுமன்றத்துக்கு அனுப்பிய அரசியல் வாதிகள் எமது அபிலாஷைகளை விட்டுக் கொடுத்து தமது நடவடிக்கைகளாலோ தவிர்ப்புக்களாலோ மேற்படி இனக் கொலைக்குக் காரணமாகி தமிழ் மக்களின் மீதான வரலாற்றுப் பழியாய் — பாதையாய் அமைந்தனர்.

ஒக்ரோபர் 10 ஆம் திகதி எம்முன் உள்ள கேள்வி என்னவென்றால் தமிழ்த்தேசியமாகிய நாம் கடந்த காலத்தவறுகளில் இருந்து பாடம் கற்று, இன்று நாம் எடுக்கும் முடிவு நாம் எமது தேசிய அபிலாஷைகளில் இருந்து எந்த விட்டுக்கொடுப்புக்கும் தயாரில்லை என்பதை முழு உலகிற்கும் பறைசாற்றுவதே.

மேலும் இத் தேர்தலில் நீங்கள் தெரிவு செய்யும் கட்சியானது எமது வாழ்வுடன் எமது தமிழ் தேசியத்தின் வியாபகத்துடன் அரசியல் சதுரங்கமாடாது மக்களின் யதார்த்தங்களை அங்கீகரிக்கத் தக்க கட்சியாக அமைய வேண்டும்.

அந்த வகையில் எம் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்காக துணிவோடு அபிலாஷைகளில் எந்த விட்டுக் கொடுப்புக்கும் தயார் அல்லாத உரிமைக்குரல் எழுப்பவும் தமிழ் அரசியல் ஸ்தாபனங்கள் இரண்டு மட்டுமே உண்டு. அவற்றுள் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் மட்டுமே எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்றது. இதற்காகவே இந்தத் தேர்தலில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸை எந்தவித தயக்கமுமின்றி எமது குடும்பத்தினர் ஆதரிக்கின்றனர் — என்றுள்ளது. (இ-3)

உதயன்

# புனிதமான ஓர் ஆயுதமாக வாக்கைப் பயன்படுத்துங்கள்

## இந்து சமயப் பேரவை கோரிக்கை

தமிழர்களது பிரச்சினைகளும் அபிலாஷைகளும் திரிபுபடுத்திக் கூறப்படுவதைத் தடுக்கவும்— அவை சர்வதேச சமூகத்தின் கவனத்துக்குத் தக்க முறையில் கொண்டு வரப்படுவதைஉறுதிசெய்யவும்

நமக்குக் கிடைத்துள்ள புனிதமான ஆயுதமாக வாக்குகளைப் பிரயோகிக்க வேண்டும் என்று இந்து சமயப் பேரவையின் கௌரவ செயலாளர் சக்திகிரீவன் வெளியிட்டுள்ள செய்தியில் கோரியுள்ளார்.

மேலும் அந்தச்செய்தியில்—




வரலாறு காணாத வகையில் தமிழ் மக்களுக்கு எதிராக யுத்தமும் அழிவும் அடக்குமுறைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள நிலையில், ஒன்றுபட்டுக்குரல் எழுப்ப வேண்டியவர்கள். ஒற்றுமையைச் சிதைத்து சுதந்திர உணர்வுகளை மழுங்கடிக்கும் முயற்சியில் ஈடுபடுவதாகவும்—

இராணுவ நடவடிக்கை மூலம் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்க நினைக்கும் பேரினவாதக் கட்சிகளும் அவர்களுக்குத் துணை போபவர்களும் இத் தேர்தலில் போட்டியிடுவதாகவும்— குறிப்பிட்டுள்ள சக்திகிரீவன், தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமை, ஒருமைப்பாடு, தாயகக் கோட்பாடு, சுயாட்சி உரிமை ஆகியவற்றைத் தொடர்ந்து வலியுறுத்தி வரும் கட்சிகளை இனங்கண்டு அவற்றுக்கு வாக்களிக்குமாறு அனைத்துத் தமிழ் மக்களையும் இந்துக்களையும் வேண்டிக் கொள்வதாகக் கூறியுள்ளார்.

### வெற்றி நமதே அனுருத்த நம்பிக்கை

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் வன்செயல்கள் அற்ற நீதியானதும், நியாயமானதுமான தேர்தலை நடத்தி நாடாளுமன்றத்தில் கூடுதல் பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ளும் என்று அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற பொது வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

யாரைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதை பொது மக்கள் தீர்மானித்துவிட்டார்கள் என்றும் அவர் அங்கு கூறினார். (ஐ-5)

# நிரந்தரத் தீர்வுக்கு சந்திரிகாவின் கரத்தை நாம் பலப்படுத்துவோம்!

## ஸ்ரீ. ல. சு.க. ஆதரவு சுயேச்சைக்குழு அறிக்கை

இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி சந்திரிகாவின் கரத்தைப் பலப்படுத்துவோம்.

மேற்கண்டவாறு யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவு சுயேச்சைக்குழு — 3 விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;-

தமிழினத்துக்கு பிரச்சினைகள் உண்டு அதைத் தீர்த்து வைத்து அவர்களை தன்மானத்துடன் வாழவைக்க பெரும்பான்மை இனம் முன்வர வேண்டுமென புயலென புறப்பட்டவரே சந்திரிகா!

இனப்பிரச்சினை தொடர்பாக ஐக்கிய தேசிய கட்சியினரை மட்டுமல்ல தனது கட்சித் தலைவர்களையும் பகிரங்கமாகச் சாடியவர் சந்திரிகா.

உள்ளத்திலே இருப்பது தூய்மையான எண்ணம் தான். ஏமாற்று அல்ல என்



பதை பல தடவைகள் நிரூபித்துக் காட்டியவர் சந்திரிகா.

தமிழ் மக்களே சிறிமாவோ காலத்தில் வாழ்வின் மலர்ச்சியை கண்ட விவசாயத் தோழர்களே! பாட்டாளிகளே!

ஆயுதமேந்திப் போராடுவது தான் போராட்டமென்பதல்ல, போராட்டத்தில் இதுவும் ஒரு வழியே! ஆயுதப் போராட்டம் போல் ஜனநாயகப் போராட்டமும் உண்டு. நாங்கள் ஜனநாயகப் போராளிகள்.

ஜனநாயகத்தின் தோல்வி தான் துப்பாக்கி ஏந்த வைத்தது என்கிறார்கள். உண்மையில் ஜனநாயகம் தோல்வி அடையவில்லை. ஜனநாயகத்தை ஏந்தியவர்கள் ஏற்று வழிநடத்திய தலைவர்களின் சுயநலமும், பலவீனமும், தகுதியின்மையுமே ஜனநாயகத்தைத் தோல்வியடையச் செய்தன.

இலட்சிய வெறிபிடித்த பலம் பெற்ற ஒரு தலைவனின் கீழ் ஜனநாயகம் உயிர்பெற்றே நிற்கும். அது தோல்வியடையாது, அதுசாகடிக்கப்பட முடியாது.

உதாரணமாக வேலுப்பிள்ளை பிரபாகரன் தன்னுடைய இலட்சியத்தில் இறுதி வரை உறுதியாக இருப்பது போல் ஜனநாயகத்திலும் இறுதி வரை உறுதியாக இருக்கும் இலட்சியத் தலைவனால் ஜனநாயகப் பாதையில் குறிக்கோள்களை வென்றெடுக்க முடியும்.

அதேபோன்று துப்பாக்கி ஏந்தியவர்களும் இறுதியில் பேச்சுவார்த்தை மேசைக்கு வந்தேயாக வேண்டும்.

நாம் மக்களுக்கு மிகவும் வினயத்துடன் சொல்வது ஆயுதப் போராட்டத்தை நாம் மலினப்படுத்தவில்லை. ஆனால்ஜனநாயகப்போராட்டத்துக்கு எமக்குப் பலத்தைத் தாருங்கள் என்பதே.

நாம் ஸ்ரீ. ல. சு. கட்சியில் முப்பது வருடகால உறுப்பினர்கள். நாடும், ஏடும், மக்களும் இதை நன்கறிவர். நாம் எந்தவித அச்சுறுத்தல்களுக்கும் பயந்து கட்சியை விட்டு ஓடியவர்கள் அல்லர். ஜனநாயகத்தில் நாம் வைத்திருந்ய நம்பிக்கைக்கு ஒரு வெற்றியாக ஜனநாயக வழிவந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவால் எமது இனத்தின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக பௌத்த மகாசங்கம், சிங்கள, பேரினவாதம் போன்ற இனவெறியர்களின் பயங்கர எதிர்ப்பின் மத்தியிலும் ஒரு தீர்வுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

ஐ தே.கட்சி மட்டும் சந்திரிகாவின் காலை வாராமல் விட்டிருந்தால் தமிழ் மக்களும் விடுதலைப்புலிகளும் மற்றும் தமிழ்க்கட்சிகளும்ஏற்கக்கூடிய ஒரு தீர்வுத்திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும்.

அதுமட்டும் நடந்திருந்தால் இன்று யுத்தம் நிறுத்தப்பட்டிருக்கும், மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டிருப்பார்கள்.

(VIII ஆம் பார்க்க)

### நாளை

புரட்டாதி 23
திங்கட்கிழமை
திதி: ஏகாதசி
நண்பகல் 12.05 வரை.
நட்சத்திரம்: அவிட்டம்
பிற்பகல்: 5.16 வரை.
ஏகதாசி விரதம்
சுபநேரம்: 12.02—1.32
ராகுகாலம்: 7.30—9.02
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதய வாக்கு

துணிக் கடைக்குச் சென்றால் கண்ணுக்குப் பிடித்தமான எல்லாத் துணிகளையுமா வாங்குகின்றோம். அதுபோலதான் மனித வாழ்விலும். மனம் நாடுவதோ [illegible] ஒன்று.

- அண்ணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயி அன்பர்களுக்கு ஓர் அறிவித்தல்

கடந்த சில வருடங்களாக சாயி அன்பர்களால் அனுஷ்டித்துவரும் 45 நாள் சாதனை இவ்வருடமும் 9-10-2000 (திங்கட்கிழமை) தொடக்கம் 22-11-2000 வரை நடைபெறும் என்பதை அன்புடன் ஞாபக மூட்டு கிறோம். நேரம் 7.30—8.00 மணி (இலங்கைநேரம்)

**செய்யும்முறை:**

மாலை 7.30 மணிக்கு முன் குடும்பத்தவர்கள் அனைவரும் தமது வீடுகளில் உள்ள பூசை அறையில் கூடிஆயத்தங்களைச் செய்தல். சரியாக 7.30 மணிக்கு 3 தடவை ஓம் காரம் தொடர்ந்து 20 நிமிடம் காயத்ரி மந்திரம். 7.50 மணி தொடக்கம் 8 மணிவரை 10 நிமிடம் ஜோதி தியானம்.

நேரம் மிக முக்கியம். அனைவரும் இணைந்து ஒரே நேரத்தில் செய்யும் பிரார்த்தனை நாட்டில் நல்ல அதிர்வுகளை ஏற்படுத்தும்.

மேலதிக விவரங்களுக்கு அருகிலுள்ள சாயி நிலையத்தில் தொடர்புகொள்ளவும். இது சம்பந்தமான விஞ்ஞான பூர்வமான ஆராய்ச்சிக்கட்டுரையுடன் விவரங்களையும் ஏப்ரல்–ஜூன் 2000 ''சாயி மார்க்கம்'' இதழ், 16 ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

ஆழ்கதியதெல்லாம், வையகம் துயர் தீர்கவே!!

வடபிராந்திய ஸ்ரீ சத்யசாயி
இணைப்புக்குழு.

(79255)

# நன்றி நவிலல்

யாழ்மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவரும்
EPDP செயலாளர் நாயகமுமாகிய

**திரு K. N. டக்ளஸ் தேவானந்தா (m. p.)**

அவர்கள் யாழ்ப்பாணம் தொழில் நுட்பக்கல்லூரி வருகை விரிவுரையாளர்களுக்கு நீண்டகாலமாக வழங்கப்படாதிருந்த கொடுப்பனவை வழங்கஉரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு உடனடியாக 37 இலட்சம் ரூபாவை பெற்றுத் தந்தமைக்காக வருகை விரிவுரையாளர்கள் அனைவரும் மனமார்ந்த நன்றியறிதலை தெரிவித்துக்கொள்கின்றோம்.

'' தொடர்க தங்கள் சமூகப்பணி ''

வருகை விரிவுரையாளர்கள்
யாழ். தொழில் நுட்பக்கல்லூரி,
கொக்குவில்.

(79287)

விஸ்வப்பிரம்ஹ சொர்ணரிஷி கோத்திர நமஹ

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



## திருமதி அப்புலிங்கம் அன்னலட்சுமி

தோற்றம்: 28 – 04 – 1933
மறைவு: 08 – 09 – 2000

கடந்த 08 - 09 - 2000 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட சகலருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (08-10-2000) எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவர்: அப்புலிங்கப் பத்தர்,
மகன்: இத்தினி,
பிள்ளைகள்.

977/1, கே.கே.எஸ். வீதி.
தட்டாதெரு,
யாழ்ப்பாணம்.

(79289)

## வாணி விழா

யாழ்ப்பாணம், ஒக். 8

நீர்வேலி வடக்கு ஐடியல் கல்வி நிலையத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவும், இன்று காலை 9 மணிக்கு வாணிவிழாவும் நிலைய அதிபர் தலைமையில் நடைபெற வுள்ளன.

கோப்பாய் பிரதேச செயலகக் கணக்காளர் ச. குகதாஸ் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக்கலந்து கொள்வார்.

நீர்வேலி வடக்கு கிராம சேவகர் எஸ். அல்பேட், நீர்வேலி தெற்கு கிராமசேவகர் எஸ். சண்முகவடிவேல், சமாதான நீதிவான் த. பரராஜசிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

(ஐ-7)

## அடிக்கடி மின் துண்டிப்பு

வலி. வடக்கு, ஒக். 8

தெல்லிப்பழை, மல்லாகம், அளவெட்டி, ஏழாலைப் பகுதிகளில் அடிக்கடி மின்சாரம் துண்டிக்கப்பட்டு வருகின்றது.

கடந்த பத்து நாள்களுக்கு மேலாக இந்நிலைமை காணப்படுகின்றது. மின்வெட்டு அமுல் செய்யப்படுவது பற்றி எந்தவித முன்னறிவித்தலும் பாவனையாளர்களுக்கு வழங்கப்படாமலே மின் துண்டிக்கப்பட்டு வருகின்றது.

இதன் மூலம் மாணவர்களும், பொதுமக்களும் பல்வேறு அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றனர்.

(ஐ-86)

## 'லங்கா சிமெந்து' தொழிலாளர் சம்பளம்

'லங்கா சிமெந்து' கூட்டுத்தாபனத் தொழிலாளர்களின் ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் யாழ். வர்த்தக வங்கியில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றன.

இதுவரை தமது கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளாத ஊழியர்கள் நாளை 9 ஆம் திகதி யாழ். வர்த்தக வங்கியில் காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-9)

## வாக்காளர் அட்டை விநியோகம்

தென்மராட்சி, ஒக். 8

தென்மராட்சி, பளை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த வலிகாமம் பகுதியில் தங்கியுள்ள வாக்காளர்களின் நலன் கருதி கரவெட்டி தபால் நிலையத்தில் தேங்கியுள்ள இந்தப் பகுதி வாக்காளர்களின் உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மட்டும் மானிப்பாய் அஞ்சல் அலுவலகத்தில் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

## மீனவ குடும்பங்களுக்கு காணி

மூளாய் ஒக். 8

சொந்தக் காணியற்ற மீனவக் குடும்பங்களுக்கு குடியிருப்பதற்கான காணித் துண்டங்களை வழங்குவதற்கு வலிகாமம் பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

அராலி மத்தியில் உள்ள சுமார் ஐந்து ஏக்கர் அரச காணி இவ்வாறு துண்டங்களாகப் பிரிக்கப்பட்டு காணியற்ற குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளது.

வலி. மேற்கு பிரதேச செயலக குடியேற்ற உத்தியோகத்தர் [illegible] வழங்க ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறார்.

(இ-99)

# துயர் பகிர்ந்த நன்றி நவிலல்

''விசுவாசிகளின் வாழ்வு மாறுபடுகின்றதே அன்றி அழிக்கப்படுவதில்லை''

கடந்த 04 - 10 - 2000 அன்று

## திருமதி அந்தோனிப்பிள்ளை மரியை

அவர்களின் பிரிவுத் துயர் வேளையில் நேரடியாக வந்து ஆறுதல் வார்த்தைகள் அளித்த உள்ளங்களுக்கும், மலர் வளையம் சாத்தியவர்களுக்கும், துயருற்றவர்களுக்கும் குறிப்பாக அருட் தந்தையர், அருட் சகோதரிகள், அருட் சகோதரர்கள், இலங்கை வங்கி அதிகாரிகள், ஊழியர்கள் (பிரதான கிளை, யாழ்ப்பாணம்), அதிபர், ஆசிரியர்கள், மாணவச் செல்வங்கள் (தூய சிறிய புஷ்பம் மகளிர் மகாவித்தியாலயம் கரம்பொன்), உறவினர்கள், நண்பர்கள், ஊரவர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- குடும்பத்தினர்.

பாஷையூர்.

(79263)

# ஆறாத்துயருடன் முதலாண்டு



தோற்றம் 08 — 03 — 1940
மறைவு 08 — 10 — 1999

## திருமதி மகேஸ்வரி தர்மலிங்கம்

(ஓய்வு பெற்ற ஆசிரியை)

உங்கள் பிரிவால் துயருறும்
கணவர்,
பிள்ளைகள், தாய், உற்றார்,
உறவினர்.

கல்வயல்,
சாவகச்சேரி.

(79077)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் **விநாசித்தம்பி மயில்வாகனம் நவரத்தினம்**

தோற்றம் 1925_08_09
மறைவு 2000_09_09

எங்கள் குடும்பத் தலைவர் விநாசித்தம்பி மயில்வாகனம் நவரத்தினம் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டுப் பல வழிகளிலும் உதவியவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், மற்றும் கடிதங்கள் தொலை பேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (2000-10-08) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துசிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


- குடும்பத்தினர்.

மானிப்பாய் வீதி,
உடுவில்.

(79291)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வார இராசி பலன்




மாற்றம்:- உத்தராடம்—மகரம் இராசியில் சந்திரன் நிற்கும். 13 – 10 – 2000 இல் நடு இரவில் மேடம் இராசிக்கு சனி வக்கிரமாகும்.

தேர்தலில் மக்கள் பதற்றப் படுவார்கள். அரசாங்கக் கட்சியினருக்கு வெற்றிகள் கிடைக்கும். மக்களின் மனோநிலை மூன்று பெரும் பிரிவுகளிடம் (கட்சிகளிடம்) செல்வாக்குப் பெறும். வடக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அதிக இடங்களைப் பெறுவார்கள். இந்தியாவில் அரசியலில் மாறுபட்ட கருத்துக்களும் — மேற்கு நாடுகளின் செல்வாக்கும் ஏற்படும். மத்திய கிழக்கில் புதிய நெருக்கடிகள் தோன்றலாம். கிழக்கு நாடுகளில் இயற்கையின் சீற்றம், மழை வெள்ளம் அழிவுகளைச் செய்யும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

## மகாதேவா ஜோதிடம்

## மேடம்

நல்லது நடப்பதும், கெட்டது நிகழ்வதும் மனிதர்களின் செயற்பாடுகளால் ஏற்படும் நிலைதான். ஏன் கடவுளைக் குறை சொல்லுகிறார்கள்? மனிதர்களது இயலாமையின் வெளிப்பாடே இது என்பது உங்களுக்குப் புரியவில்லையா? உங்கள் தொழில் ஸ்தானத்தில் ஒரு குழப்ப நிலை ஏற்பட்டபடி இருக்கும். அடுத்துக் கெடுக்கும் நண்பர் கூட்டம் பழிவாங்க யோசிக்கலாம். எதிர்ப்பாலாருடன் நிதானமாக இருக்கவும். சிலருக்கு இடமாற்றங்கள் நேரிடலாம். உடல்நிலையில் கொஞ்சம் கரிசனை எடுங்கள். மூட்டுவலி, வயிற்றுநோ, மனக்குமுறல், உஷ்ண பீடைகள் என்பன வரும். நகைவேலை, கலைத்துறை, ஹோட்டல், பத்திரிகை, செய்தித்துறை, அச்சு, கொம்பியூட்டர், புடைவை போன்ற துறையில் ஈடுபாடுள்ளவர்களுக்கு இலாபங்கள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன், வெள்ளி.

## இடபம்

பொறாமை மனிதர்களுக்கு எவ்வளவு தூரம் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது? எதிர்ப்பாலாரின் உதவிகள் பிறரை வித்தியாசமான பார்வை பார்க்கச் செய்யும். எனவே தொழில் ஸ்தானத்தில் நிதானமாக இருக்கவும். பெற்றோர் வழியினர்கள் உதவிகள் செய்வார்கள். அரசியல்வாதிகளின் உதவிகள் கிடைக்கலாம். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும்காணி பூமி விஷயமாக யோசனை அதிகரிக்கும். உஷ்ணபீடைகள், சலநோய், தொண்டை வருத்தம் என்பன ஏற்படலாம். இடமாற்றங்களைத் தவிர்த்துக்கொள்ளவும். தூரதேசச் செய்திகளால் மனம் குழம்பாதீர்கள். போக்குவரத்துத்துறை, இசைத்துறை, செய்தித்துறை, ரீ.வி. துறை, ஹோட்டல் துறை போன்ற துறையினர்கள் அதிக நன்மைகளை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்! திங்கள், புதன், வெள்ளி.

## மிதுனம்

என்ன அவசரம்? ஒருவரின் வலிமை உடலில் அல்ல, அவரின் மனதில் உள்ளது என்பதை நீங்கள் அறியாதவரா? எதையும் முழுமையாக அறிய முற்படுவதில் குற்றமில்லை. உங்கள் தொழில் ஸ்தானத்தில் கலகலப்பாக இருப்பீர்கள். ஆனால் குடும்பத்தினரிடையே அபிப்பிராயபேதம் ஏற்படலாம். அரசியல் கட்சிகளின் தாக்கம் வரலாம். தேவையற்ற வசனங்களை அள்ளி வீசாதீர்கள். வாய்வுத் தொல்லை, பித்தவருத்தம், முதுகு, பாதம் வலி, சளிப்பு, களைப்பு, உரசல் காயங்கள் என்பன வரலாம். வீடுவாகன சுகம் கிடைக்க இடம் உண்டு. போக்குவரத்துத்துறை, குருத்துறை, விவசாயத்துறை, எண்ணெய்த்துறை போன்ற துறையினர்களுக்கு மாற்றங்களும் இலாபங்களும் கிடைக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன்.

## கடகம்

அறிவாளிகள் — அனுபவசாலிகள் எல்லோரும்—ஒரு நாட்டிற்கோ, தம் வீட்டிற்கோ சேவை செய்ய முடியும் என நாம் நம்பமுடியாது. எதுவாகிலும் உங்கள் கடமையில் கண்ணாக இருங்கள். தொழில்ஸ்தானத்தில் அரசியலைக் கலந்து அவதிப்படாதீர்கள். எதற்காகப் பயப்படுகிறீர்கள்? சிரித்துச் சிரித்துச் சமாளியுங்கள். வாழ்க்கை வாழ்வதற்கே என நினையுங்கள்; பயம் கலைந்துவிடும். எதிலும் ஆராய்ச்சி எண்ணங்கொண்டு செயற்படுவீர்கள். சகோதரங்களின் உதவிகள் கிடைக்கும். தாயாரைப் பற்றியோ-தாயாருடன் வாழ்ந்த வாழ்வைப் பற்றியோ சிந்தனைகள் மேலிடும். நெஞ்சு வருத்தம், சலவருத்தம், கைகால், மூட்டிகள் நோக்கள், வயிற்று வருத்தங்கள் என்பன வர இடம் உண்டு. எண்ணெய்த்துறை, பாதுகாப்புத்துறை, கமிஷன் துறை, வியாபாரத்துறை போன்ற துறையினர்கள் இலாபம் அடைவார்கள்.

★ அதிர்ஷ்டநாள்:- சனி. திங்கள், புதன், வியாழன்.

## சிங்கம்

நாம் எதையும் போராடித்தான் பெறலாம். அதிலே ஒரு சுகம், திருப்தி எமக்கு ஏற்படும். உறுதி, விடாமுயற்சி, தெய்வ நம்பிக்கை அனுபவசாலிகளின் ஆலோசனை என்பனவற்றை அத்திவாரமாகக் கொண்டு சுயமுயற்சியாலே முன்னேறி வரும் உங்களுக்குத் தொழில் ஸ்தானத்தில் ஓர் இடம் எப்பொழுதும் இருந்துகொண்டிருக்கும். உங்களின் விடாமுயற்சியால் புகழ் பரவும். சகோதரங்களுடன் கருத்து வேறுபாடுகள் வரலாம். ஆயினும் விடாது ஆலோசனைகளைச் செய்து காரியங்களை நிறைவேற்ற முயலுங்கள். மனப் போராட்டம், நெஞ்சு வருத்தம், கைகால் உளைவு, உஷ்ணபீடைகள் என்பன வந்து தொல்லை தரலாம். கீரை வகைகளைச் சாப்பாட்டில் சேர்த்துக் கொள்ளவும். குருத்துறை, தொழில் நுட்பத்துறை, எண்ணெய்த் துறை, மருந்துத்துறை, வியாபாரத்துறை, விவசாயத் துறை தொடர்பானவர்கள் அதிக இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்டநாள்:- சனி. புதன், வியாழன்.

## கன்னி

மக்களை அன்பாகவும், அதிகாரமற்ற நிலைப்பாட்டிலும் எந்தக் கட்சியோ ... நபரோ நடத்துகிறா... அந்தளவு தூரம் அவர்கள் ஆதரவுகளைப் பெறுவார்கள். தொழில் ஸ்தானத்தில் சிரித்துச் சிரித்து அன்பாகச் செயற்படுங்கள். எவருடனும் அளவாகக் கதைத்துக்கொள்ளுங்கள். வருமானப் பெருக்கங்கள் ஏற்படும். எதிர்ப்பாலாருடன் அவதானமாக நடந்து கொள்ளவும். தொழில் ஸ்தானத்தில் சிலரின் தந்திரப் போக்கு உங்களை மனம் நோகச் செய்யும். அரசியல் பேசி அவதிப்படாதீர்கள். சகோதரங்களிடையே கருத்து வேற்றுமை ஏற்பட இடம் உண்டு. சளி, தலைநோ, கிருமித் தாக்கம், மூலநோய், சல மல நோய் என்பன தாக்க இடம் உண்டு. கைகால் பிடிப்பு வர இடமுண்டு. சட்டத்துறை, வங்கித் துறை. பாதுகாப்புத் துறை, ஆசிரியத்துறை, எண்ணெய்த்துறை, வியாபாரத் துறை போன்ற துறையினர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்டநாள்:- சனி, புதன், வியாழன்.

## துலாம்

என்ன அவசரம் உங்களுக்கு? தேர்தலைப் பற்றி அதிகம் சிந்திக்கக் கூடாது. மக்களை முழுமையாக அரசியல்வாதிகள் நம்புவதும் இல்லை. அரசியல்வாதிகளை அறிவாளிகள் பினதொடர்வதுமில்லை. ஏதோ, வழியில் தேங்காயை தெருவில் பிள்ளையாருக்கு' அடித்து விட்டுப் போவோம் என்ற நிலை. யாருக்கு நஷ்டம் என்பதைச் சிந்திக்காத நிலைதான். எனவே உங்கள் தொழில் வருமானத்தில் கவனமாக இருங்கள். காலம் மிக வேகமாக ஓடிக் கொண்டு இருக்கின்றது. இடமாற்றங்களில் நிதானம் தேவையாகும். தோல் வருத்தம், சல வருத்தம். நரம்பு. ஈரல். வயிற்றுநோ போன்ற தொல்லைகள் வரலாம். சட்டத்துறை, பாதுகாப்புத் துறை. கோயில் துறை. கலைத்துறை. மின்சாரத் துறை, செய்தித்துறை. ரி.வித் துறைபோன்ற துறையினர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்:- சனி, ஞாயிறு, புதன், வெள்ளி.

## விருச்சிகம்

அடிவாங்குபவர்கள் தான் அதிகாரத்தைக் கைப்பற்றுவார்கள். காசுக்காக, சண்டித்தனத்திற்காக வோட்டுக்களை எவரும் கேட்டு வைக்க மக்கள் அனுமதிக்க மாட்டார்கள். இது அரசியல் தந்திரமாகும். யுத்தமும் திடீரென நிற்காது. அரசியல் முதிர்வும், அதிகாரப் பகிர்வின் வேகத்தில் தங்கியுள்ளது. தொடங்கிய இடத்தில் முடிவு வரும் பட்டும் அரசியல் ஓட்டம் நிற்காது என புத்திஜீவிகள் சிந்திப்பதில் நியாயம் இல்லாமல் இல்லை. நீங்கள் தொழில்ஸ்தானத்தில் நிதானமாக இருங்கள். உங்கள் உழைப்பிலேயே நீங்கள் உறுதியாக நிற்பீர்கள். அயலவர்களின் ஆதரவு இருக்கும் காலமாகும். கிருமித்தாக்கம், மூக்கு, தொண்டை நோ, கைகால்பிடிப்பு சிறு உரசல் காயங்கள் என்பன வரஇடமுண்டு. தொழில் நுட்பத் துறை, மருந்துத்துறை, வாகனத்துறை, பாதுகாப்புத் துறை போன்ற துறையினர்களுக்கு அதிக இலாபங்கள் கிடைக்க இடமுண்டு.

★ அதிர்ஷ்ட நாள்:- சனி, புதன், வெள்ளி.

## தனுசு

சண்டித்தனம் போட்டு [illegible] தேர்தல் முடிந்தகையோடு இடம்மாறிவிடுவார்கள். இதெல்லாம் காலங்காலமாக நடக்கும் சம்பிரதாயம். இதை மக்கள் தற்பொழுது பேசிக்கொள்ளுகின்றார்கள். சில்லறையைப் போட்டு பெரியதாளை எடுக்கும் தந்திரம் எல்லோக்கும் விளங்காதா? எனவே இப்படியான விசயங்களைக் கண்டும் காணாத மாதிரி நடந்து கொள்வது நல்லது. ஆனால் இதையெல்லாம் கவனித்துவிட்டு ஒரு பிரசங்கமே செய்து எதிர்ப்புக்களைத் தேடிக் கொள்வீர்கள். 'நா காக்க' என்பதில் நிதானமாக இருந்தால நன்று. குடும்பத்தினரின் நலனில் அக்கறை காட்டுவீர்கள். இரத்த உறவில் ஒரு பிரிவால் வேதனை வரும். அதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். வயிற்றுநோ, குடல் வருத்தம், நாரிநோ, இடுப்புக்கொதிப்பு விறைப்பு என்பன வரலாம். போக்குவரத் துறை, வியாபாரத்துறை. பாதுகாப்புத்துறை. நிர்வாகத்துறை. குருத்துறை போன்ற துறைகள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்:- சனி, திங்கள், புதன், வியாழன்.

## மகரம்

அடுத்த கப்பல் வாங்கி ஓட ஓர் அரசியல் என்றால் மக்களை எதற்குத் தலைவர்கள் எப்படி எடைபோடுகிறார்கள் என யோசிக்கிறீர்களா? அரசியலில் எதுவும் நடக்கலாம். எனவே அதிகம் சிந்திக்காமல் உங்கள் தொழில் ஸ்தானத்தில் கண்ணாக இருங்கள். இலாபம் கருதியே உலகத்தில் பலர் இயங்குகிறார்கள். நீங்களும் இலாபத்தில் கண்ணாக -தொழிலில் உறுதியாக இருங்கள். புதிய பொறுப்புக்கள் தேடி வரும் எதிர்ப்பாலாருடன் எதிர்க்காமல் அனுசரித்துப் போங்கள். அடிக்கடி மனக்குழப்பம், மூட்டுவலிகள், தோல் வருத்தம். சளித்தொல்லை, வயிற்றுவருத்தம், நரம்புச்சோர்வு என்பன வரலாம் குருத்துறை, செய்தித்துறை, அச்சுத்துறைகள், விவசாயத்துறை, கடல்துறை போன்றதுறையினர்கள் அதிக இலாபங்களை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, திங்கள், வெள்ளி.

## கும்பம்

'கலகம் பிறந்துதான் நியாயம் பிறக்கும்' ஆனால் இங்கு தேர்தல் கூட்டங்களில் கலகம் செய்வித்து — குண்டு வைத்து அனுதாபம் தேடுகிறார்களோ என எண்ணத்தோன்றுகிறது எப்படித் தேடினால் என்ன? பத்தாம்திகதி தெரிந்துவிடும் தானே. எனவே தொழில் ஸ்தானம் பாதிக்காமல் கருத்துடன் இருங்கள். இலாபங்கள் அதிகரிக்கும். எதிர்ப்பாலார்கள் உதவிசெய்வார்கள். குடும்பத்தின் செலவுகளால் கருத்து வேற்றுமைகள் ஏற்பட இடம் உண்டு. அரசியல் ஈடுபாடு சிலருக்கு நன்மை தரும். இடமாற்றங்களைத் தவிர்க்கவும். எந்த விசயத்தையும் உணர்வு பூர்வமாகப் பார்த்தால், தனிமையில் அமைதி வரும். அடிக்கடி பயப்பாடுகள் வந்து அலைமோதும். மலச்சிக்கல், கைகால் வீக்கம், தலையிடி என்பன வரும். அரசியல்துறை, ஆசிரியத்துறை, சந்தைத்துறை, விவசாயத்துறை போன்ற துறைகளுக்கு இலாபங்கள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, திங்கள். வியாழன்.

## மீனம்

மக்களைத் தூரத்தில் வைத்து வீரம்பேசி வாக்குக் கேட்கும் அரசியல்வாதிகள் எப்பொழுது மக்களுக்குக் கிட்டவந்து அவர்களின் குறைகளைக் கேட்டு நிவர்த்தி செய்யப் போகிறார்கள் என மக்கள் பேசிக்கொள்கிறார்கள். சிலம்பு வித்தை சில நாள்கள் தான் எனவே உங்கள் தொழில் ஸ்தானத்தில் அவதானமாக இருக்கவும். ஓடி ஓடித்திரிந்து காரியமாற்றுவீர்கள் சிரித்துச்சிரித்து காரியங்கள் செய்வதனால் வெற்றி கிடைக்கும். இடமாற்றங்கள் நல்ல நல்ல எதிர்பாலாருடன் நிதானமாக. அன்பாக இருங்கள் இடுப்பு வருத்தங்கள், சளித்தொல்லை கை கால் உளைவு.நோ, சமிபாக்குணம் என்பன வரலாம். மின்சாரத் துறை, வியாபாரத்துறை, சட்டத்துறை, குருத்துறை போன்ற துறைகளிலுள்ளவர்களுக்கு அதிக இலாபங்கள் கிடைக்கும்

★ அதிர்ஷ்ட நாள்: சனி, திங்கள், வியாழன்.

## எமது பாராட்டுக்கள்

புலோலி ப. நோ. கூ. சங்கத் தலைவர், முகாமையாளர், களஞ்சியப் பொறுப்பாளர், கிளை முகாமையாளர், உதவியாளர்கள் அனைவரும் எமது லாலா சோப் உற்பத்திக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து மனமுவந்து கொள்வனவு செய்து விற்பனை செய்கின்றார்கள். இவர்களுக்கு எமது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**லாலா சோப் தொழிற்சாலை,**
-அச்சுவேலி.

(13281)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

**அமரர் சாமுவேல் சின்னத்துரை**

பன்னாலை

| மண்ணில்: | விண்ணில்: |
| --- | --- |
| 5-1-1932 | 7-9-2000 |

இவரின் அந்தியேட்டி இவரதுஇல்லத்தில் 9-10-2000 திங்கட்கிழமை நடைபெற இருப்பதால் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பு மனைவி: செல்லம்மா,
மக்கள்: ஜீவபாலன், ஜீவராணி, ஜீவராசன்,
ஜீவசோதி, ஜீவசாந்தம், ஜீவகௌரி,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நிரந்தர முகவரி:-
நீலாவத்தை,
தெல்லிப்பழை.

தற்காலிக முகவரி:-
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

(79274)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க அறிவித்தல் நாடாளுமன்றத் தேர்தல் 2000-10-10

## இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்கு மாற்று வாக்கெடுப்பு நிலையங்களிலே வாக்களிக்கும் வசதி

தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேசங்களில் வசித்த / இடம்பெயர்ந்த வாக்காளர்களின் வசதி கருதி அவர்களுக்காக முன்பு அமைக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்தின் பெயரும் அவர்களின் பிரதேசமும் தற்பொழுது அவர்கள் சென்று வாக்களிக்க வேண்டிய மாற்று நிலையமும் கீழே காட்டப்பட்டுள்ளன.

அந்தந்தப் பிரதேச வாக்காளர் யாவரும் தற்பொழுது சென்று வாக்களிக்க வேண்டிய நிலையத்திலேயே வாக்களித்தல் வேண்டும். எனவே இவர்களுக்காக விசேட பிரயாண வசதிகள் 2000--10--10 ஆம் திகதியன்று என்னால் செய்து கொடுககப்படும்.

வாக்கெடுப்புப் பிரிவு – 'ஏ' – சாவகச்சேரி

**தெரிவத்தாட்சி அலுவலர்**
*தேர்தல் மாவட்டம் இல. 10, யாழ்ப்பாணம், 2000–10–10.*

| வாக்கெடுப்பு மாவட்ட இல. | பிரதேசம் | முன்னைய வாக்கெடுப்பு நிலையம் | தற்பொழுது சென்று வாக்களிக்க வேண்டிய நிலையம் | பின்வரும் உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டைகளுக்குரியவர்கள் தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|---|
| 01. | கைதடி | யா/கைதடி குருசாமி வித்தியாலயம் | யா/ நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி | 01 | — 1730 |
| 02. | கைதடி | யா/கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம் | யா/ ,, ,, ,, | 02 | — 1196 |
| 03. | கைதடி | யா/கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம் | யா/ உடுவில் இராமநாதன் கல்லூரி | 01 | — 1348 |
| 04. | கைதடி | யா/கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம் | யா/ நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி | 01 | — 2001 |
| 05. | நாவற்குளி | யா/கைதடி நாவற்குளி மகா வித்தியாலயம் | யா/ உடுவில் இராமநாதன் கல்லூரி | 01 | — 1218 |
| 06. | நாவற்குளி | யா/கைதடி நாவற்குளி மகா வித்தியாலயம் | யா/ ,, ,, | 01 | — 1408 |
| 07. | கோகிலாக்கண்டி | யா/கோகிலாக்கண்டி மகாலக்சுமி வித்தியாலயம் | யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி | 01 | — 507 |
| 08. | கைதடி நாவற்குளி, மறவன்புலோ | யா/மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம் | யா/ உடுவில் இராமநாதன் கல்லூரி | 01 | — 1431 |
| 09. | தனங்களப்பு | யா/தனங்களப்பு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை | யா/ ,, ,, | 01 | — 603 |
| 10. | மீசாலை தெற்கு | யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் | யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | — 1512 |
| 11. | மீசாலை தெற்கு | யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் | யா/ ,, ,, | 01 | — 1729 |
| 12. | சாவகச்சேரி வடக்கு | யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி | யா/ ,, ,, | 01 | — 1139 |
| 13. | சாவகச்சேரி வடக்கு | யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி | யா/ ,, ,, | 01 | — 1154 |
| 14. | சாவகச்சேரி தெற்கு | யா/கல்வயல் சண்முகானந்தா வித்தியாலயம் | யா/ ,, ,, | 01 | — 1431 |
| 15. | நுணாவில் மேற்கு | யா/நுணாவில் மேற்கு அ.த.க. பாடசாலை | யா/ உடுவில் இராமநாதன் கல்லூரி | 01 | — 1864 |
| 16. | நுணாவில் கிழக்கு-மேற்கு | யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம் | யா/ ,, ,, | 01 | — 1152 |
| 17. | சாவகச்சேரி தெற்கு | யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம் | யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலம் | 01 | — 1488 |
| 18. | சாவகச்சேரி தெற்கு | யா/டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி | யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | — 1830 |
| 19. | சாவகச்சேரி தெற்கு | யா/ டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி | யா/ ,, ,, | 01 | — 1377 |
| 20. | சாவகச்சேரி தெற்கு | யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி | யா/ ,, ,, | 01 | — 1192 |
| 21. | கைதடி - நுணாவில், மட்டுவில் | யா/ கைதடி நுணாவில் அ. த. க. பாடசாலை | யா/ உடுவில் இராமநாதன் கல்லூரி | 01 | — 1794 |
| 22. | மட்டுவில் தெற்கு | யா/ மட்டுவில் தெற்கு அ. மி. த. க. பாடசாலை | யா/ ,, ,, | 01 | — 1828 |
| 23. | மட்டுவில் வடக்கு | யா/ சந்திரபுரம் சாந்தநாயகி வித்தியாலயம் | யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | — 1117 |
| 24. | மட்டுவில் வடக்கு | யா/ மட்டுவில் கமலாசனி வித்தியாலயம் | யா/ ,, ,, | 01 | — 952 |
| 25. | மட்டுவில் வடக்கு | யா/ மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம் | யா/ ,, ,, | 01 | — 1148 |
| 26. | சரசாலை | யா/ சரசாலை தெற்கு சரஸ்வதி வித்தியாலயம் | யா/ ,, ,, | 03 | — 1229 |
| 27. | சரசாலை | யா/ சரசாலை கணேச வித்தியாலயம் | யா/ ,, ,, | 01 | — 1082 |
| 28. | மீசாலை வடக்கு | யா/ வீரசிங்கம் மகா வித்தியாலயம், மீசாலை | யா/ ,, ,, | 02 | — 1276 |
| 29. | மீசாலை வடக்கு | யா/ வீரசிங்கம் மகா வித்தியாலயம் மீசாலை | யா/ ,, ,, | 01 | — 1356 |
| 36. | எழுதுமட்டுவாள் தெற்கு | யா/ எழுதுமட்டுவாள் ஸ்ரீ கணேச வித்தியாலயம் | யா/ ,, ,, | 01 | — 1206 |
| 43. | தாவளை - இயற்றாலை | யா/ வரணி மகா வித்தியாலயம் | யா/ ,, ,, | 02 | — 2009 |
| 44. | மந்துவில் | யா/ வரணி மகா வித்தியாலயம் | யா/ ,, ,, | 01 | — 2112 |

**வாக்கெடுப்புப் பிரிவு:- 'க' - கிளிநொச்சி**

| வாக்கெடுப்பு மாவட்ட இல. | பிரதேசம் | முன்னைய வாக்கெடுப்பு நிலையம் | தற்பொழுது சென்று வாக்களிக்க வேண்டிய நிலையம் | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|---|
| 01. | வேம்பொடுகேணி, இத்தாவில் | கி/ பளை மகா வித்தியாலயம் | யா/ கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம் | 01 | — 72 |
| 02. | இளாலி | கி/ கிளாலி றோமன் கத்தோலிக்க த. க. பாடசாலை | ★ யா/நெல்லியடி மத்திய மகா ,, | 01 | — 589 |
| 03. | முகமாலை | கி/ வேம்பொடுகேணி மகா வித்தியாலயம் | யா/ நெல்லியடி மத்திய மகா ,, | 01 | — 850 |
| 04. | தம்பகாமம், வண்ணான்கேணி, பெரியபளை | கி/ பளை மகா வித்தியாலயம் | யா/ ,, ,, ,, | 01 | — 1930 |
| 05. | புலோப்பளை மேற்கு, புலோப்பளை கிழக்கு | கி/ பளை மகா வித்தியாலயம் | யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி | 02 | — 1315 |
| 06. | தர்மக்கேணி, சோரன்பற்று, மாசார் | கி/ சோரன்பற்று கணேச வித்தியாலயம் | ★ யா/ நெல்லியடி மத்திய மகா ,, | 01 | — 1246 |
| 07. | முகாவில், மல்வில், ஊர்வளிக்கன்பற்று, இயக்கச்சி | கி/ வேம்பொடுகேணி மகா வித்தியாலயம் | யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | — 905 |
| 08. | சங்கத்தார்வயல், கொத்[illegible] குளம், கோவில்வயல் | கி/ வேம்பொடுகேணி மகா வித்தியாலயம் | யா/ ,, | 01 | — 581 |

(கி/13267)

(★ 07 — 10 — 2000 அன்று பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் செய்யப்பட்ட மாற்றங்கள் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க அறிவித்தல்

## நாடாளுமன்றத் தேர்தல் - 2000-10-10

### உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் அனுப்பிய பிற்பாடு வாக்கெடுப்பு நிலையங்களில் ஏற்பட்ட மாற்றங்கள்

மேற்படி தேர்தலின் பொழுது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை வாக்காளர்களுக்கு அனுப்பிய பிற்பாடு தவிர்க்கமுடியாத காரணங்களினால் மாற்றப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்கள் கீழேகாட்டப்பட்டுள்ளன

| வாக்கெடுப்பு மாவட்ட இல. | உத்தியோகபூரவ வாக்காளர் அட்டையில் குறிக்கப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையம் | தற்பொழுது சென்று வாக்களிக்க வேண்டிய நிலையம் | பின்வரும் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளுக்குரியவர்கள். தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|
| | **வாக்கெடுப்புப் பிரிவு:- 'ஆ' — வட்டு.** | | | |
| 32 | யா/சாந்தை சிற்றம்பலம் வித்தியாலயம் | யா/ பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி | 01 | 1259 |
| | **வாக்கெடுப்புப் பிரிவு 'இ' -காங்கேசன் துறை** | | | |
| 02 | யா/மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம் | யா/ மாதகல் புனித தோமஸ் றோமன் கத்தோலிக்க தமிழ்ப் பெண்கள் பாடசாலை | 01 | 1773 |
| 03 | யா/மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம் | யா/ மாதகல் புனித தோமஸ் றோமன் கத்தோலிக்க தமிழ்ப் பெண்கள் பாடசாலை | 01 | 1433 |
| | **வாக்கெடுப்புப் பிரிவு: 'உ' — கோப்பாய்** | | | |
| 42 | யா/இருபாலை இலங்கைத் திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலை | யா/ கோப்பாய் மகாவித்தியாலயம் | 01 | 1020 |
| 43 | யா/கோப்பாய் தெற்கு ஸ்கந்தவேள் வித்தியாலயம் | யா/ கோப்பாய் மகாவித்தியாலயம் | 01 | 1256 |
| | **வாக்கெடுப்புப் பிரிவு:- 'ஊ' — உடுப்பிட்டி** | | | |
| 03 | யா/ கரணவாய் மணியகாரன் தோட்டம் வித்தியாலயம் | யா/ கரணவாய் மகா வித்தியாலயம் | 02 | 1684 |
| 09 | யா/ சம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | யா/ வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம் | 03 | 2043 |
| 10 | யா/ கெருடாவில் இந்து தமிழ்க் கலவன் பாடசாலை | யா/ வல்வை சிவகுரு வித்தியாலயம் | 01 | 1723 |
| 14 | யா/ பொலிகண்டி அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை | யா/ பொலிகண்டி இந்துசபை தமிழ்க் கலவன் பாடசாலை | 01 | 1500 |
| 19 | யா/ வல்வெட்டி இந்து தமிழ்க் கலவள் பாடசாலை (ஆண்கள்) | யா/ வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம் (ஆண்கள்) | 01 | 2953 |
| | யா/ வல்வெட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை (பெண்கள்) | யா/ வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம் (பெண்கள்) | | |
| | **வாக்கெடுப்புப் பிரிவு:- 'ஊ' — உடுப்பிட்டி** | | | |
| 25 | யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி | யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி | 01 | 1759 |
| 36 | யா/ கரணவாய் தெற்கு விநாயகர் வித்தி. | யா/ கரவெட்டி விக்கினேஸ்வரா வித்தியாலயம் | 02 | 1483 |
| | **வாக்கெடுப்புப் பிரிவு:- 'எ' — பருத்தித்துறை** | | | |
| 09 | யா/ துன்னாலை மேற்கு மெதடிஷ்ற் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை | யா/ புலோலி மெதடிஸ்ற் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை | 02 | 1413 |
| 14 | யா/ புற்றளை மகா வித்தியாலயம் | யா/ புலோலி மெதடிஸ்ற் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை | 02 | 2041 |
| 19 | யா/ சென். தோமஸ் மகளிர் பாடசாலை பருத்தித்துறை | யா/ கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை | 02 | 1950 |
| | **வாக்கெடுப்புப் பிரிவு:- 'ஏ' — சாவகச்சேரி** | | | |
| 31 | யா/ விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம் | ★ யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | 1332 |
| 32 | யா/ கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | ★ யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | 1582 |
| 34 | யா/ கொடிகாமம் அரசினர் தமிழ்க் கலவன் பாடச லை | ★ யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | 1733 |
| 35 | யா/ எழுதுமட்டுவாள் வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலை | ★ யா/ நெல்லிபடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | 701 |
| 37 | யா/ உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் | ★ யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | 398 |
| 38 | யா/ உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் | ★ யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 02 | 735 |
| 39 | யா/ வரணி சைவப்பிரகாச வித்தியாலயம் | ★ யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | 1153 |
| 40 | யா/ கரம்பைக்குறிச்சி அ. த. க. பாடசாலை | ★ யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 02 | 1063 |
| 42 | யா/ நாவற்காடு கணபதிப்பிள்ளை தமிழ்க் கலவன் பாடசாலை | ★ யா/ நெல்லியடி மத்தியமகா வித்தியாலயம் | 01 | 1329 |

(★ 07 — 10 — 2000 அன்று பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் செய்யப்பட்ட மாற்றங்கள் )

(சி/13275)


## முதலாம் ஆண்டு நினைவு



**அமரர் கனகசபை கவிதரன்**

(ஊழியர், மக்கள் வங்கி)

கடமை தவறாத இனிய உள்ளம் கொண்ட
''கவி''யை இன்றைய நாளில் நினைவு கூருகின்றோம்

முகாமையாளர், ஊழியர்,
நலன் புரிச் சங்கம்.

மக்கள் வங்கி,
நெல்லியடி.

(சி-13274)


## நிரந்தரமாக்க நடவடிக்கை

வலிகாமம் தெற்கு, ஒக். 8

பட்டம் பெற்றபின் தகுதிகாண் ஆசிரியர்களாக பாடசாலைகளில் நியமனம்பெற்ற ஆசிரியர்கள், நியமனம் பெற்ற திகதியில் இருந்து நான்கு வருடங்களைப் பூர்த்திசெய்து இருப்பின் அவர்களைச்சேவையில் நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வலிகாமம் கல்வி வலயத்தில் இப்படியான ஆசிரியர்கள் இருப்பின் பாடசாலை முடிவடைந்த நேரங்களில் வலய அலுவலகத்துக்கு வந்து உரிய படிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து ஒப்படைக்குமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் வீ. இராசையா கேட்டுள்ளார்.

இதுவரை மொழித் தகைமை பெறாத தகுதிகாண், பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்கள் தொடர்பான விவரங்களையும் உடனடியாகப் பெற்று சமர்ப்பிக்குமாறு [illegible] கல்விப் பணிப்பாளர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

(இ-132)


## OXFORD INSTITUTE

K. K. S. வீதி, சுன்னாகம்.

A/L 2000 இல் பரீட்சை எழுதிய
மாணவர்கள் தங்கள் பெறுபேற்றை அறிய விரும்பின்
ஒக்ஸ்போர்ட் கல்வி நிலையத்தை நாடவும்.

A/L 2001,-2002 வகுப்புக்கள்
9 - 10 - 2000 4 மணிக்கு ஆரம்பம்.

யாழ். முன்னணி ஆசிரியர்குழாம்
ஒக்ஸ்போர்ட் வருகை.

தொடர்புகளுக்கு: நிர்வாகி
பா. மணிவண்ணன்.

(சி/13278)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். பல்கலைக்கழக 19 ஆவது பட்டமளிப்பு விழாவில்
விவசாய விஞ்ஞான மாணி பட்டம் பெற்ற

**செல்வி லதா நாகேஸ்வரன்**

அவர்களை உளமார வாழ்த்துகின்றோம்.

த. தவராசா குடும்பம்,
S. சிவானந்தராசா குடும்பம்,
ச. ஜெயதாஸ் குடும்பம்.

(சித்தப்பாமார்)

யாழ்ப்பாணம். (79278)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



குரும்பசிட்டி

### திருமதி பரமேஸ்வரி இராசேந்திரம்

தோற்றம்: 1924 - 01 - 03 | மறைவு: 1997 - 10 - 12

திதி: 08 - 10 - 2000

நிழல் தந்த மரமொன்று நிலையிலா
துழல் கின்ற மானிடத்தின் உருவை நீக்கி
நிழல் அந்தோ நீடித்த தில்லைக் கூத்தன்
கழல் என்றே காட்டியது மூன்றாண்டின்று

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.**

68, பருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

(79265)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



### செல்வன் பாலகிருஷ்ணன ஜெயராஜ்

(கண்ணன் G.A.Q. மாணவன்)

மலர்வு: 25 — 01 — 1980 | உதிர்வு: 25 — 08 — 2000

இன்று(08-10-2000) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில், இல. 30, கேசாவில் பிள்ளையார் கோயில் வீதி, வண்ணார்பண்ணையில் அமைந்துள்ள எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய கிரியைகளிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன வைபவத்திலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கடந்த 25—08—2000 எமது அன்புச் செல்வனின் மரணச் செய்திகேட்டு விரைந்தது வந்து எமக்கு வேண்டிய உதவிகளைச் செய்தவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், தமது அனுதாபச் செய்திகளை நேரில் வந்து தெரிவித்தவர்களுக்கும் தொலைபேசி மூலமும், கடித மூலமும் அனுதாபம் தெரிவித்துக்கொண்டவர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றியைத் தெரித்துக்கொள்கின்றோம்.

**அப்பம்மா, ஐயா, அம்மம்மா,**
**தாய், தந்தையர்.**

நிரந்தர முகவரி:
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

தற்காலிக முகவரி:
இல. 30, கேசாவில்
பிள்ளையார் கோயில் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(79267)

## கருத்தரங்கும் செயலமர்வும்

வடமராட்சி, ஒக். 8

7 ஆம், 10 ஆம் தர வகுப்புகளுக்கு இந்து சமயம் போதிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும், செயலமர்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரிய பயிற்சிக்கிளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த வகுப்புகளில் கற்பிற்கும் ஆசிரியர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா கேட்டுள்ளார். (இ-173)

## வடமராட்சியில் தேங்காய் விலை

தென்மராட்சிப் பகுதியில் இருந்து மக்கள் வெளியேறி மீண்டும் அப் பகுதிகளுக்குச் செல்ல முடியாத காரணத்தால் வடமராட்சிப் பகுதிகளில் தேங்காய் விலை அதிகரித்துள்ளது.

சில இடங்களில் தேங்காய் விலை 20 ரூபாவாக அதிகரித்துள்ளது. (இ-31)

## ஷெல்லுக்குப் பலியானவர்

சாவகச்சேரி, ஒக். 8

உடுப்பிட்டிப் பகுதியில் நேற்று முன்தினம் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் உயிரிழந்தவர் உடுப்பிட்டியைச் சேர்ந்த பொன்னையா சின்னத்தம்பி (வயது 60) என்று தெரிவிக்கப்படுகிறது.

காலை உடுப்பிட்டி தொண்டமானாறு வயல்வெளிப் பகுதியை அண்டிய பகுதியில் உள்ள காணியொன்றில் இவர் பனம்பாத்தி கொத்திக் கொண்டிருக்கும்போதே ஷெல் வீழ்ந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-31)

## வயோதிபரின் சடலம்

யாழ்ப்பாணம், ஒக். 8

ஊரெழுவில் உள்ள தோட்டம்ஒன்றிலிருந்துமீட்கப்பட்டதாகக் கூறி கோப்பாய்ப் பொலீஸாரினால் வயோதிபர் ஒருவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

உருக்குலைந்த நிலையில் காணப்பட்ட இந்தச் சடலம் ஊரெழு கிழக்கைச் சேர்ந்த வைரவன் முத்துவேல் (வயது 65) என்பவருடையது என அடையாளம் காணப்பட்டது.

ஊரெழுவில் இராணுவ காவலரணுக்கு அருகில் உள்ள தோட்டம் ஒன்றிலிருந்து இவரது சடலம் மீட்கப்பட்டதாகவும் இவர் இறந்து சுமார் 15 நாள்கள் ஆகியிருக்கும் என்றும் கோப்பாய் பொலீஸாரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-10-ரி)

## கிணற்றிலிருந்து சடலம்

இளம் ஆசிரியை ஒருவரின் சடலம் கிணற்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

மூளாயைச் சேர்ந்த திருச்செல்வம் மனோகரி என்பவரே இறந்தவர் ஆவார்.

கடந்த வியாழக்கிழமை அவரின் வீட்டுக்கிணற்றில் இருந்துசடலம்மீட்கப்பட்டது.

மல்லாகம் மாவட்ட நீதிவான் திரு. ப. சுப்பிரமணியம் விசாரணைகளை நடத்தினார். (இ-99)

## வாணிவிழா

நல்லூர் சயன்ஸ் அக்கடமியின் வாணிவிழா இன்று காலை 10 மணிக்கு அக்கடமி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிறுவன இயக்குநர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக ஆங்கிலத்துறைசிரேஷ்ட [illegible] குருக்கள் சரவணபவ ஐயர் கலந்து [illegible] தொடர்ந்து கலைநிகழ்வுகள் இடம்பெறும். (இ—9)

## சாவகச்சேரி பிரதேச சபை கொடிகாமம்

## விண்ணப்பம் கோரல்

சாவகச்சேரி பிரதேச சபையில் அமைய, தற்காலிக ஆங்கில தட்டெழுத்தாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை முழு விவரங்களுடனும் 16—10—2000 ஆம் திகதிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக 'செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபை, பழைய ஆஸ்பத்திரி வீதி, நெல்லியடி, கரவெட்டி என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

### வேண்டப்படும் தகைமைகள்

01. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. 18 - 45 வயதுடையவராக இருத்தல் வேண்டும்.
03. சாவகச்சேரி பிரதேச சபையின் நிர்வாகப் பிரதேசத்தில் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
04. இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் க. பொ. த (சா/த) பரீட்சை அல்லது அதற்கு சமனான பரீட்சையில் தமிழ், ஆங்கிலம், கணிதம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச்சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.
05. க.பொ.த (சா/த)தில் ஆங்கில தட்டச்சில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
06. தொழில் சார் அனுபவம் மற்றும் தொழில்நுட்ப சான்றிதழ் பெற்றிருப்பதுடன் இரு மொழிகளிலும் தட்டச்சு செய்யும் அனுபவம் இருத்தல் கூடுதல் தகுதியாகக் கொள்ளப்படும்.

**அன்ரன் பொன்னையா**
தலைவர்,
சாவகச்சேரி பிரதேச சபை.

செயலாளர்,
சாவகச்சேரி பிரதேச சபை,
கொடிகாமம்.
06-10-2000.

(சி/13282)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர் பெரியதம்பி சோமசுந்தரம்

(உரிமையாளர், பிரபாகரன் கபே)

தோற்றம்: 16 - 05 - 1935 | மறைவு: 06 - 09 - 2000

அன்பின் திருவுருவாய் பண்பின் பிறப்பிடமாய்
பாசப்பிணைப்புடனே நீர் இருந்தீர்.
துன்பம் பல வந்தபோதும் துணிவுடனே
தூய பணி செய்து நீர் வாழ்ந்தீர்.
இன்பம் பலபெற்று உலகுயரவேண்டுமெனும்
உயர்வான சிந்தையுடன் வாழ்ந்தவரே!
என்பும் உரியர் பிறர்க்கென்ற வள்ளுவரின்
ஈடில்லா இலட்சியத்தில் நீர் வாழ்ந்தீர்.
''வையகம் இருக்குமட்டும் நின்நாமம் துலங்குமப்பா''

இன்று (08-10-2000) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள்.**

மல்லாகம் சந்தி,
மல்லாகம்.

(79272)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க அறிவித்தல்

## நாடாளுமன்றத் தேர்தல் - 2000 - 10 - 10

### இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்கு மாற்று வாக்கெடுப்பு நிலையங்களிலே வாக்களிக்கும் வசதி

கொடிகாமம், வரணி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேசங்களில் வசித்த இடம்பெயர்ந்த வாக்காளர்களின் வசதி கருதி அவர்களுக்காக முன்பு அமைக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்தின் பெயரும் அவர்களின் பிரதேசமும் தற்பொழுது அவர்கள் சென்று வாக்களிக்க வேண்டிய மாற்று நிலையமும் கீழே காட்டப்பட்டுள்ளன.

அந்தந்தப் பரதேச வாக்காளர் யாவரும் தற்பொழுது சென்று வாக்களிக்க வேண்டிய நிலையத்திலேயே வாக்களித்தல் வேண்டும். எனவே இவர்களுக்காக விசேட பிரயாண வசதிகள் 2000—10—10 ஆம் திகதியன்று என்னால் செய்து கொடுக்கப்படும்.

தெரிவத்தாட்சி அலுவலர்
தேர்தல் மாவட்ட இல. 10 — யாழ்ப்பாணம்.

2000—10—06

## வாக்கெடுப்புப் பிரிவு "ஏ" -- சாவகச்சேரி

| வாக்கெடுப்பு மாவட்ட இல, | பிரதேசம் | முன்னைய வாக்கெடுப்பு நிலையம் | தற்போது சென்று வாக்களிக்க வேண்டிய நிலையம் | பின்வரும் உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டைகளுக் குரியவர்கள் தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|---|
| 30 | கொடிகாமம், தவசிகுளம் | யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் | யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | — 2503 |
| 31 | விடத்தற்பளை, கெற்பெலி | யா/ விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம் | யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | — 1228 |
| 32 | பலாலி, கச்சாய் | யா/ கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | — 1459 |
| 33 | வெல்லாம் போக்கட்டி அல்லாரை | யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் | யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | — 1321 |
| 34 | மிருசுவில் | யா/ கொடிகாமம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை. | யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | — 1575 |
| 35 | எழுதுமட்டுவாள் வடக்கு | யா/ எழுதுமட்டுவாள் வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலை. | யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | — 668 |
| 37 | கரம்பகம் | யா/ உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் | யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | — 378 |
| 38 | உசன் | யா/ உசன் இராமநாதன் மகா வித்தியாலயம். | யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | — 681 |
| 39 | வரணி வடக்கு | யா/ வரணி சைவப்பிரகாச வித்தியாலயம். | யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | — 1011 |
| 40 | இடைக் குறிச்சி, கரம்பைக் குறிச்சி. | யா/ கரம்பைக் குறிச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை. | யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | — 952 |
| 41 | இடைக் குறிச்சி. கரம்பைக் குறிச்சி. | யா/ வரணி மகாவித்தியாலயம். | யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | — 635 |

(சி/13279)

## நீங்காத நினைவில் ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் **கதிரவேலு வீரசிங்கம்**

அன்னை மடியில் 03 - 01 - 1944 ஆண்டவன் அடியில் 21 - 09 - 1999

''ஆண்டொன்று ஆனபோதும் ஆறவில்லை நம்துயரம்
ஆண்டவனே வந்தாலும் ஆறுதல் இனி வந்திடுமோ!
கண்ணெதிரே நிகழ்ந்த காட்சிதான் மறந்திடுமோ?
காலமெல்லாம் கண்ணீரைக் காணிக்கை
ஆக்குகின்றோம்''

அன்னாரின் ஆத்மா முருகனின் திருவடியில் முக்தி நிலைபேறு அடையப் பிரார்த்திக்கின்ற

**மனைவி, மகள், உறவினர்கள்.**

சாவற்கட்டு வீதி,
ஆனைக்கோட்டை.

(79282)

## நெதர்லாந்திலிருந்து கோழிக்குஞ்சுகள்

யாழ்ப்பாணம், ஒக. 6

யாழ்ப்பாணத்தில் கோழிக் குஞ்சு உற்பத்தியை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் நெதர்லாந்தில் இருந்து 600 தாயினக் கோழிக்குஞ்சுகள் (முட்டையிடும் இனம்) செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கப்பலில் யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்தக் கோழிக்குஞ்சுகள் அச்சுவேலி கைத்தொழில் பேட்டையிலுள்ள கோழிப் பண்ணையில் வைத்து பராமரிக்கப்படும்.

ஆறு மாத பராமரிப்பின் பின்னர் அடுத்தவருடம் ஜனவரி மாத இறுதியில் இவற்றின் முட்டைகளில் இருந்து கோழிக் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படும் என்று கால்நடை சுகாதார திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை மேலும் 600 தாயினக் கோழிக் குஞ்சுகள் (இறைச்சி இனம்) இந்தியாவிலிருந்து கொண்டு வரப்படவுள்ளன.

கடந்த வருடம் மே மாதம் இந்தக் கோழிப் பண்ணைக்கு கனடாவிலிருந்து கொண்டு வரப்பட்ட ஆயிரத்து 200 தாயினக்கோழிகளின் குஞ்சு உற்பத்திக்காலம் முடிவடைந்துள்ளதாலே புதிய தாயினக் கோழிக்குஞ்சுகள் தற்பொழுது நெதர்லாந்த், இந்தியா போன்ற நாடுகளிலிருந்து கொண்டுவரப்படுகின்றன.

(இ-5)

## இலங்கை வங்கி அறிவித்தல்

### சாவகச்சேரிக் கிளை

சாவகச்சேரிக் கிளையில் சிக்குண்டிருந்த ஆவணங்கள் தற்பொது நெறிப்படுத்தப்பட்டுள்ளதால் மேற்படி வங்கிக்கிளை தற்போது வாடிக்கையாளருக்கான வழமையான சேவைகளை,

**09 - 10 - 2000 (திங்கள்) முதல்**

வழங்கும் என மகிழ்ச்சியோடு அறியத்தருகின்றது.

இடம்:- யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள
இலங்கை வங்கி
பிரதேசக் காரியாலயக் கட்டடம்
(தற்காலிகமாக மறு அறுவித்தல் வரை)

கரும நேரம்:- காலை 9.30 மணி முதல் நண்பகல் 12-00 மணி வரை.
(மறு அறிவித்தல் வரை)

மேலும் வடமராட்சியிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் இடம் பெயர்ந்து வாழும் எமது வாடிக்கையாளரின் நன்மை கருதி ஒவ்வொரு வாரமும்.

**செவ்வாய், வியாழன்**

ஆகிய இரு நாள்களிலும் இக் கிளையின் ஒரு விசேட கரும பீடம் இதுவரை இயங்கிய இடமான பருத்தித்துறையில் (இலங்கை வங்கி அருகில்) செயற்படுத்தப்படும்.

நேரம்;- முற்பகல் 9-00 மணி முதல் நண்பகல் 12-00 மணி வரை. இக்கரும பீடத்தின் செயற்பாடுகள் பற்றிய மேலதிக விவரங்களை சாவகச்சேரி இலங்கை வங்கி முகாமையாளரிடமோ அல்லது யாழ். பிரதேச முகாமையாளரிடமோ பெற்றுக் கொள்ளலாம்.

பிரதேச முகாமையாளர்,
இலங்கை வங்கி,
யாழ்ப்பாணம்.

(சி-13283)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகிழ்வுடன் போற்றுகின்றோம்!

எம் ஆருயிர்த் தோழன் சிவான்ஜனே!
எம் மனதில் இடம்பிடித்த சோதரனே!
6-10-2000 இல் யாழ். பல்கலையினிலே,
நடைபெற்ற பட்டமளிப்பு விழாவினிலே,
முதல் வகுப்பு விஞ்ஞானமாணி ஆனவனே!
உன் திறமை கண்டு மகிழ்கிறோம் எம்மனதினிலே.
மேன்மேலும் பட்டங்கள் இப் பாரினிலே,
நீ காண விரும்புகின்றோம் எம் நேரினிலே.
இன்னுமின்னும் வளம்பெற உன் வாழ்வினிலே,
வேண்டுகின்றோம் என்றென்றும் ஆண்டவனை.

**ஜுப்பிற்றர் கழக நண்பர்கள்,**
சங்கானை.
(79288)

## பட்டமளிப்பு விழா

பாராட்டும், ஆசீர்வாதங்களும், வாழ்த்துக்களும்

6-10-2000 அன்று யாழ். பல்கலைக்கழகத்தில்
நுண்கலைப் பிரிவில்

### இசைக்கலைமாணி

பட்டம் பெற்ற

கல்வியங்காடு
**பிரம்மஸ்ரீ கு. சபாரெத்தினகுமாரக்குருக்கள்**
(கமலபூஷணக் குருக்கள்) தம்பதியினரின் ஏகபுத்திரியும்
**பிரம்மஸ்ரீ ச. சிவபாலகுமாரசர்மாவின்**

சகோதரியும்
**பிரம்மஸ்ரீ கு மதிவதனசர்மா (C.O.)**
(தொழில்நுட்பவியலாளர் - உடுவில் பிரதேசசபை)
(சுன்னாகம்)
அவர்களின் பிரிய பத்தினியும் (துணைவியார்)

ஆனைக்கோட்டை உயரப்புலம்
**பிரம்மஸ்ரீ க. குகதாஸக்குருக்கள்**
தம்பதிகளின் அன்பு மருமகளுமாகிய

இசைக்கலைமாணி
**பிரம்மஸ்ரீ கு. மதிவதணசர்மா**
**மரகதவல்லி அம்மா (மாலா)**

அவர்களை மனதார வாழ்த்திப் பாராட்டி
ஆசிர்வதிக்கின்றோம்.

பிரம்மஸ்ரீ கி. பங்குசசர்மா - ப.ஜெயஷீலா
தம்பதிகள்

சஞ்ஜீவி மருந்தகம்
புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.

ப. ரிஷிகேசன் ப. சௌமித்திரா
மருமக்கள் ஊரெழு

பிரம்மஸ்ரீ ந. அகிலேஸ்வரசர்மா - புஸ்பகலா
தம்பதிகள்

பிரம்மஸ்ரீ கு. சசிசேகரன் சர்மா குகநந்தினி
தம்பதிகள் (பிரான்ஸ்)

**மருமக்கள், துர்க்காதர்ஷன், சௌபர்ணிகா,**
(மொறீசியஸ்) (79200)

## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை நடராசா
(சின்னராசா)

44/6. கல்லூரி ஒழுங்கை, நீராவியடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை நடராசா 06 - 10 - 2000 அன்று காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற சங்கரப்பிள்ளை தம்பதிகளின் புதல்வனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், மனோகரன் (இந்தியா), காலஞ்சென்ற தயாபரன், முரளீதரன் (ஜேர்மனி), கெங்காதரன் (சுவீஸ்), கிருபாகரன் (சுவீஸ்), மனோகரி, மனோகௌரி (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், புனிதவதி பிறேமாவதி (ஜேர்மனி), இதயகுமாரி (இந்தியா), சாந்தினி (கனடா), கிருஷ்ணமூர்த்தி, வசந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற கனகம்மா, காலஞ் சென்ற கந்தசாமி, சுப்பிரமணியம், லோகசுந்தரம் ஆகியோரின் சகோதரனும், இரத்தினதேவி, பரமேஸ்வரன், நித்தியலட்சுமி, இராஜேஸ்வரன், பாலச்சந்திரன் ஆகியோரின் மைத்துனரும் கோபிநாத், கஜகரி, சஞ்சீவினி, கோபிதன், டிலுக்ஷன் (ஜேர்மனி), இராகவி (கனடா), கனிதா, மேனகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள்இன்று(08-10-2000) ஞாயிற்றுக்கிழமை 12-00 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்!
க. பிறேமச்சந்திரன்
(பெறாமகன்)
செ. கிருஸ்ணமூர்த்தி
(மருமகன்)

44/6, கல்லூரி ஒழுங்கை,
நீராவியடி. (சி-13273)

## சத்துணவு விநியோகம்

பச்சிலைப்பள்ளி, தென்மராட்சி ஆகிய பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சிப் பிரதேசத்தில் தங்கியுள்ள போசாக்குக் குறைந்த ஐந்து வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார், பாலூட்டும் தாய்மார் ஆகியோருக்கு பளைப் பிரதேச சபையினர் சத்துணவுகளை வழங்கி வருகின்றனர்.

பிரதேசத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடத்தப்படும் தாய் சேய் சிகிச்சை நிலையங்களில் வைத்து சத்துணவுப் பைக்கற்றுக்கள் வழங்கப்படுவதாக பிரதேச சபை செயலாளர் கு. ந. பாலச்சந்திரன் தெரிவித்தார்.

இதற்கான நிதியினை வடக்கு — கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ஐ-117)

## வீதியை விட்டு வாகனம் விலகியது

வீதியால் வந்து கொண்டிருந்த இராணுவ வாகனம் ஒன்று பாதையை விட்டு விலகி, தோட்டம் ஒன்றுக்குள் புகுந்தது. இதனால் அத்தோட்டத்தில் நின்ற பல மரவள்ளி மரங்கள் முறிந்து நாசமாகின.

இச்சம்பவம் நேற்றுக்காலை 8 மணியளவில் நெல்லியடிப் பகுதியில் இடம்பெற்றது.
(ஐ-9)

## மின் தாக்கி குடும்பஸ்தர் மரணம்

நெல்லியடி, ஒக். 8

இரவு வேளை சட்டவிரோதமான வகையில் களவாக மின்சாரம் பெறமுயன்ற குடும்பஸ்தர் ஒருவர், மின்சாரத்தினால் தாக்குண்டு பலியானார்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு பொலிகண்டி ஆலடிப் பகுதியில் இடம்பெற்றது.

பளையிலிருந்து இடம்பெயர்ந்து இப்பகுதியில் வசித்துவந்த முருகேசு தங்கராசா (வயது 38) என்பவரே இவ்வாறு மரணமானவர் ஆவார்.

இவரது சடலம், வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டு, பிரேத பரிசோதனையை, வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே. மயிலேறும் பெருமாள் மேற்கொண்டார்.

பருத்தித்துறை மாவட்ட பதில் நீதிவான் திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரன் மரணவிசாரணையை மேற்கொண்டபின் விபத்து மரணம் எனத் தீர்ப்பு வழங்கினார். (ஐ-109)

### நிரந்தரத் ...

(1 ஆம் பக்கத்தொடர்)

ஆகவேதான் மீண்டும் மீண்டும் உங்களைக் கேட்கிறோம், சந்திரிகாவின் கரத்தைப் பலப்படுத்துங்கள். சந்திரிகாவால் மட்டும் தான் எமது பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும். வேறு எந்தத் தலைவராலும் இது முடியாது.

பல வருட யுத்தத்தின் கொடுமையால் வீடு வாசல், பொருள் பண்டம், சொத்துச் சுகம், கற்பு மானம், கல்வி அறிவு, கலை கலாசாரம், உறவு நேசம், கணவன் மனைவி, அண்ணன் தம்பி, உற்றார் பெற்றார், உரிமைகள் எல்லாமே போய் விட்டன.

எமது மண்ணில் அமைதி, சமாதானம், நிம்மதி வேண்டாமா?

நிம்மதி வேண்டுமானால் சந்திரிகாவின் கரத்தைப் பலப்படுத்துங்கள்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## வாஜ்பாயின் வாக்குறுதியால் மமதா ராஜினாமா வாபஸ்!

இந்தியாவில் உயர்த்தப்பட்ட பெற்றோலிய விலைகளைக் குறைப்பது தொடர்பாக மத்திய அரசு மறுபரிசீலனை செய்யும் என்று உறுதியளிக்கப்பட்டதை அடுத்து மமதாபனர்ஜி, அஜித்குமார் பாஞ்சா ஆகியோர் தமது ராஜினாமாக்களை வாபஸ் பெற்றனர்.

இவர்களுக்குப் பிரதமர் வாஜ்பாய் எழுதிய கடிதத்தில் தனது முட்டுவலிக்கான சிகிச்சை முடிவடைந்து மும்பையிலிருந்து புதுடில்லி திரும்பியதும் பெற்றோலிய விலை குறைப்புத் தொடர்பாக முடிவு எடுப்பதாக உறுதியளித்தார்.

இதனையடுத்து மமதாவும் அஜித்குமார் பாஞ்சாவும் தத்தமது அமைச்சுப் பணிகளைத் தொடர்வதாக அறிவித்துள்ளனர்.

## வாழ்த்துகின்றோம்

2000 ஆம் ஆண்டு நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சைப் பெறுபேற்றில் தீவக வலய மட்டத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற நெடுந்தீவு கிழக்கு சுப்பிரமணிய வித்தியாலய மாணவன்

**செல்வன் க. தனஞ்ஜெயன் – 169**
அவர்களையும்
அவரோடு சித்திஎய்திய மாணவி
**செல்வி தி. தாரணி – 141**

அவர்களையும் வாழ்த்துகின்றோம். இவர்கள் சித்தி பெற ஆக்கமும் ஊக்கமும் நல்கிய நெடுந்தீவு சுப்பிரமணிய வித்தியாலய அதிபர் M S. கணபதிப்பிள்ளை அவர்களையும் சக ஆசிரியர்களையும் ஏனைய அன்புள்ளங்களையும் வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.

யா/ நெடுந்தீவு கிழக்கு சுப்பிரமணிய
வித்தியாலய
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
நெடுந்தீவு. (79262)

## கண்ணீர் அஞ்சலி

### ஆறுமுகம் முருகேசு

அன்னாரின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு வேதனை அடைவதுடன் அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

கோபிகா ஆடையகம்
(சி/13287) நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் முருகேசு

யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தைச் சேர்ந்த ஆறுமுகம் முருகேசு அவர்கள் (06-10-2000) வெள்ளிக்கிழமை இரவு அகால மரணமாகிவிட்டார்.

அன்னார் நிரஞ்சனாவின் அன்புக்கணவரும், முரளிதரன், முகுந்தன், முகிலன், கௌசிகா, முகிந்திரன், முரளிகாந்த் ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 8-10-2000 ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல், தனக்கிரியைக்காக முற்பகல் 9-00 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்!
சம்மந்தன் (தம்பாலை)
நண்பர்கள்.
மானிப்பாய் வீதி,
ஒட்டுமடம் சந்தி (79292)

### சின்னையா சின்னத்தம்பி (சிவசம்பு)

நாவற்குழியைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னையா சின்னத்தம்பி (இளைப்பாறிய F. A. கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்), 7 – 10 – 2000 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா — அன்னப்பிள்ளை தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற மனோன்மணியின் (குரும்பசிட்டி) அன்புக் கணவரும், சுதாகர் (ஜேர்மனி), சுதாமதி (பிரான்ஸ்), ஜெயமதி (கனடா), சுகுமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகேஸ்வரி, யோகராணி, சேத்திரகுமார், நிருபாதரன், அனுஷா ஆகியோரின் மாமனாரும், சுவேதா, சுதன், ருஷான். ருபேஷ் பிரதீப், பிரனேஷ், பிரனிதா, நிறோஜன், ஜெனிதன், நிஜேதன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (8 – 10 – 2000) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்கிசை மகிந்தா மலர்ச்சாலையில் நடைபெற்று கல்கிசை பொது மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. சேகர் (மகன்)
மு. அமிர்தலிங்கம்,
க. இராமநாதன்

B 1/2, அரசாங்க தொடர் மாடி,
ஆஸ்பத்திரி வீதி,
தெகிவளை. T. P. 718038 (13286)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org